வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 29.06.2022 புதன்கிழமை இதழ் : 205 பக்கங்கள் : 16

# எரிபொருள் இறக்குமதி, விற்பனைக்கு பெற்றோலிய நாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 29

**நாட்டில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும் சில்லறை விற்பனைக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவிருக்கிறது.**

**எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள நிறுவனங்களுக்கே இந்த அனுமதியை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.**

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கிகளின் மூலம் அன்னிய செலாவணி மை பெறாமலே சில மாதங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்யக்கூடிய நிறுவனங்களையே இதற்காக தெரிவு செய்யவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு தேவையான களஞ்சியப்படுத்தல், விநியோகம், போன்ற பணிகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வழங்கும் என்றும் இதற்காக அந்த நிறுவனங்களிடமிருந்து சேவைக்கான கட்டணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள 1190 லங்கா எரிபொருள் விற்பனை நிலையங்களும் ஐஓசி விற்பனை நிலையங்கள் மட்டுமன்றி புதிதாகவும் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் விற்பனை செய்யப்படவுள்ளது.

தற்போது நாட்டின் எரிபொருள் தேவையில் 90 வீதத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் 10 வீதத்தை லங்கா ஐ. ஓ. சி. நிறுவனமும் பூர்த்தி

15

# எம். பிக்களைக் கொல்ல மக்கள் விரும்புகின்றனர்!

## சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, ஜூன் 29

தற்போதைய சூழ்நிலை காரணமாக இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை பேணுவது கடினமாக உள்ளது என்று தெரிவித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, "பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் கொல்ல விரும்புகிறார்கள்", என்று தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் குழு ஒன்றிடம் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தனது பாராளுமன்ற பதவிக் காலத்தில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள்

15

# வாடிக்கையாளர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும்!

## லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எரிபொருளை வழங்குவதாக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

லங்கா ஐ. ஓ. சி. வழமை போன்று எரிபொருளை விநியோகித்து வருகின்றது. சில வரம்புகளுக்கு உட்பட்டு டோக்கன் முறைமையை பின்பற்றுவதாக அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# இலங்கை நிலவரம் தொடர்பில் ஜி-7 மாநாட்டில் மோடி பேச்சு!

பேர்லின், ஜூன் 29

இலங்கையின் நெருக்கடி நிலைமை தொடர்பில் ஜி-7 மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசியுள்ளார். இதன்போது, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கைக்கு இந்தியா உதவுவதாகவும் மோடி இதன்போது தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானுக்கு 35 ஆயிரம் தொன் கோதுமையை அனுப்பியுள்ளோம்.

15

# ஜப்பான் தூதுவருடன் கூட்டமைப்பினர் பேச்சு

கொழும்பு, ஜூன். 29

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொக்குவிலிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சந்தித்தார்.

நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின்

15

# உயர்கிறது பஸ் கட்டணம்

கொழும்பு, ஜூன். 29

எரிபொருட்களின் விலை அதிகரிப்பினைக் கருத்திற்கொண்டு பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளதாக, தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது

இதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில், பஸ் கட்டணங்கள் 30 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது.

15

# இலங்கை உணவுப் பாதுகாப்புக்கு 20 மில்லியன் டொலர் நிதியுதவி

## ஜோ பைடன் அறிவிப்பு



நியூயோர்க், ஜூன்.29

இலங்கையின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த 20 மில்லியன் டொலர் கூடுதல் உதவியாக வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே

15

# எரிபொருள் விநியோகம் நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 29

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான களஞ்சியசாலையான கொலன்னாவையிலிருந்து எரிபொருள் விநியோகம் செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் பயன்படுத்துவதற்கான 1100 தொன் பெற்றோல், 7500 தொன் டீசல் கையிருப்பில் இருந்தன. இந்நிலையில் எரிபொருள் வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த நிலையில், எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்

15

# ஜூலை 1 முதல் 10ஆம் திகதிவரை எரிபொருள் வரிசையில் நிற்காதீர்!

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 29

இலங்கை அரசின் 2285/04 ஆம் இலக்க 2022.06.20ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் அலுவலகர்களுக்கு மாத்திரம் ஜூலை 01 முதல் 10ஆம் திகதி வரை எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத் தலைவர்களின் சிபாரிசுக்கு அமை

15

## பத்திரிகை விநியோகிக்க ஆட்கள் தேவை!

ஈழநாடு நாளிதழ்களை யாழ்ப்பாணம் நகரிலிருந்து சைக்கிள் மூலம் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை.

**யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை (பருத்தித்துறை வீதி) யாழ்ப்பாணம் - கொடிகாமம் (ஏ-9 வீதி), யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் (பலாலி வீதி) , யாழ்ப்பாணம் - மாவிட்டபுரம் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் - சங்கானை - காரைநகர்.**

**சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

தொடர்புகளுக்கு: -
077 311 9298, 075 313 2805

## இப்படியும் நடக்கிறது...!

மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜேவிபி, அண்மையில் தமது யாழ்ப்பாண மாவட்ட மாநாட்டை நடாத்தியிருந்தது.

நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு ஊழல் அரசியல்வாதிகளே காரணம் என்றும், தங்களால் மட்டுமே ஊழல் இல்லாத ஆட்சியைத் தரமுடியும் என்றும் ஜேவிபி தொடர்ச்சியாக கூறிவருகின்றது.

யாழ்ப்பாண மாநாட்டில் பேசிய அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க, பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையை எம்மிடம் தாருங்கள், நாம் தேர்தலொன்றை நடாத்தி ஆறு மாதத்திற்குள் ஒரு தீர்வை ஏற்படுத்துவோம் என்று, யாழ்ப்பாண மாநாட்டில் வைத்து அறைகூவல் விடுத்துள்ளார்.

உங்களிடம் தந்தால் தற்போது உங்களிடமுள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சியமைப்பீர்கள், சரி. அது என்ன ஆறுமாதத்தில் தீர்வைத் தருவோம் என்கிறீர்கள்? அது என்ன வகையான தீர்வு என்பதையுமல்லவா கூறவேண்டும். இந்த நாடு இன்று இருக்கும் பொருளாதார நிலையில் அதனை சரிசெய்ய மாதங்கள் அல்ல, வருடங்கள் சில ஆகலாம் என்றே அனைத்து தரப்பினரும் ஆரூடம் சொல்லி வருகின்றனர்.

ஊழலற்ற ஆட்சியை உங்களால் மாத்திரமே தரமுடியும் என்று நீங்கள் கூறிக்கொண்டிருக்கும்போதுதான், அண்மையில் சமூக ஊடகங்களில் ஒரு பழைய செய்தி பரவலாக பகிரப்பட்டதைக் காணமுடிந்தது.

கடந்த இரண்டாயிரத்தி பத்தொன்பதில் வெளியான “ஏசியன் வேள்ட்நியூஸ்” என்ற லண்டனைத் தளமாகக் கொண்ட சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரை அது. அதில் சிறிலங்காவின் முதல் பத்து பணக்கார அரசியல்வாதிகள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தனர். அதில் எட்டாவது ஆளாக அனுர குமாரவின் பெயரும் இடம்பெற்றிருந்தது. எப்படி அந்த நிலைக்கு நீங்கள் வந்தீர்கள் என்பதையுமல்லவா நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்?

சரி, அந்த விடயத்தைத்தான் விட்டுவிடுவோம். “ஆனால், தமிழ் மக்களுக்கு எங்கள் தொடர்பில் சந்தேகம் காணப்படுகின்றது“ என்பதை யாழ்ப்பாண மாநாட்டில் பேசும்போது கூறிய நீங்கள், அந்த சந்தேகத்தை போக்குவதற்கு என்ன முயற்சியை இதுவரை எடுத்திருக்கிறீர்கள் என்பதையுமல்லவா கூறியிருக்கவேண்டும்?

அதிகம் வேண்டாம், இன்று நாடு இருக்கும் நிலைமைக்கு, இந்த நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படாததுதான் முக்கிய காரணம் என்றல்லவா தமிழ் தலைவர்கள் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறெனில், அந்த இனப்பிரச்னைக்கு உங்கள் கட்சியிடம் என்ன தீர்வு இருக்கின்றது. அதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றியுமல்லவா தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அதுவும் இதனை முழுமையாக நம்புகின்ற தமிழ் தேசியத் தலைவர்களையும் மாநாட்டிற்கு அழைத்து முதல் வரிசையில் உட்கார வைத்துவிட்டு உரையாற்றுகின்றபோது, அவர்கள் உங்களிடமிருந்து அதைத்தானே எதிர்பார்ப்பார்கள் என்பது கூடவா தெரியாமல் போனது?

ஜேவிபியிடம் கேட்க மற்றுமொரு முக்கிய கேள்வி உண்டு. இடதுசாரிகளாக இன்றும் தங்களை முன்நிறுத்துகின்றவர்கள் ஜேவிபியினர். ஆனால், அவர்களின் இந்த மாநாட்டில் இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் இடதுசாரிகளாக இயங்கிக்கொண்டிருப்பவர்கள் எவரையுமே காணமுடியவில்லை. சி. கா. செந்தில்வேல் இவர்களில் முக்கியமானவர். அவரை மாநாட்டில் காணவில்லை. அடுத்தவர், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் தி. சிறிதரன். இன்றும் தெற்கில் உள்ள இடதுசாரித் தலைவர்களுடன் நெருக்கமாக இயங்கிக் கொண்டிருப்பவர். அவரிடம் கேட்டபோதுதான் அந்த விடயமே தெரியவந்தது. தனக்கு மாநாட்டுக்கான அழைப்பு, மாநாடு முடிந்த பின்னரே வட்ஸ்அப்பில் அனுப்பப்பட்டிருந்ததாம். அட, தபாலில் அனுப்பியிருந்தாலும் அது தாமதமாக கிடைக்க சந்தர்ப்பம் உண்டு. ஆனால், வட்ஸ்அப்பில் மாநாடு முடிந்த பின்னர் ஜேவிபியின் யாழ்மாவட்ட அமைப்பாளரிடமிருந்து அழைப்பிதழ் கிடைத்தது என்கிறார் சிறிதரன்.

ஒரு மாநாட்டை நடத்துவதில் தமது “திறமையை“ காட்டியிருக்கும் ஜேவிபி, விழுந்து கிடக்கும் நாட்டை ஆறுமாதத்தில் நிமிர்த்திக் காட்டுகின்றோம் என்று வேறு சவால் விட்டுக்கொண்டிருக்கின்றது!

- ஊர்க்குருவி

# சிறுப்பிட்டியின் 50 விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகள் விநியோகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியைச் சேர்ந்த விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகள் விநியோகிக்கப்பட்டன. நாட்டில் நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக உரங்கள் மற்றும் எரிபொருளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதால் உணவு உற்பத்தி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு குறைந்தளவு நீரும் பசளைகளுமே போதுமான சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இராசதானியம் என்ற திட்டத்தைக் கடந்த மாதம் முதல் முன்னெடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறுப்பிட்டியில் 50 விவசாயிகளுக்குக் குரக்கன், பயறு, காராமணி ஆகியவற்றின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் கு. மயூரதன் தலைமையில் நடைபெற்ற விதைகள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இராசதானியத் திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார்.

வளவாளராகக் கலந்துகொண்ட ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் குறைந்தளவு நீர்ப்பாசனத்துடனும் பசளைகளுடனும் எவ்வாறு சிறுதானியச் செய்கையினை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் பயிர்களில் பீடைகளின் தாக்கங்களைக் கட்டுப்படுத்தும் இயற்கை வழிமுறைகள் பற்றியும் தெளிவுபடுத்தினார். (ஐ)



# பருத்தித்துறை சாலை ஊழியர் போராட்டம் முடிவுக்கு வந்தது!

வடமராட்சி, ஜூன் 29

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலை ஊழியர்கள் திங்கட்கிழமை முன்னெடுத்த போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

தமது போக்குவரத்துக்கு பெற்றோல் வழங்க வேண்டும் என்று கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வட பிராந்திய முகாமையாளர் நேற்று நேரடியாக பருத்தித்துறை சாலைக்கு சென்று அவர்களுக்கான பெற்றோலை விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று வழங்கப்பட்ட உத்தரவாதத்தை அடுத்தே இந்தப் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

இதையடுத்து, நேற்று முற்பகல் முதல் போக்குவரத்து சேவைகளும் ஆரம்பமாகின.

இதேசமயம், இந்தப் போராட்டத்தால் தமது பயணத்துக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## பாதுகாப்பு செயலர் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 29

மைனா கோ கம, கோட்டா கோ கம உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது படைத் தரப்பினர் உரிய நடவடிக்கை எடுத்தார்களா என்பதை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பாதுகாப்பு செயலர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான சன்ன ஜயசுமண மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோரிடமும் ஆணைக்குழு நேற்று முன்தினம் வாக்குமூலம் பெற்றுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவும் ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார். தற்போது வரை சுமார் 30 அதிகாரிகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தலைமையிலான இந்த ஆணைக்குழு, ஜனாதிபதியினால் அண்மையில் நியமிக்கப்பட்டது. (ஐ)

### கண்ணிவெடி அகற்ற நிதியுதவி

# ஜப்பான் - டாஸ் நிறுவனம் ஒப்பந்தம் கைச்சாத்தானது

வடமராட்சி, ஜூன் 29

டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்கான அடுத்த ஓராண்டுக்கான ஜப்பான் நாட்டு உதவிக்கான ஒப்பந்தம் நேற்று செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

நேற்று காலை 8.30 மணியளவில் முகமாலையில் உள்ள கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறும் பகுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஷி கிடேகி இந்த நிகழ்வில் கலந்துகொண்டு, நன்கொடையாளர் சார்பில் ஒப்பமிட்டார். அவருடன் ஜப்பான் தூதரகத்தின் 2ஆம் நிலை செயலாளர் இகராசி டோருவும் ஒப்பமிட்டனர்.

டாஸ் நிறுவனத்தின் சார்பில் இயக்குநரும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருமான ஆனந்த சந்திரசிறி மற்றும் செயல்திட்ட முகாமையாளர் சுனில் ஆரியசேன ஆகியோர் ஒப்பமிட்டனர்.

குறித்த பணியை முன்னெடுப்பதற்கான 681, 812 அமெரிக்க டொலருக்கான மானிய ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டது.

டாஸ் நிறுவனத்துக்கு 19. 06. 2022 வரை அனைத்து நன்கொடையாளர்களின் நிதி உதவியுடன் 15. 82 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 106,304 மனிதருக்கு தீங்கு ஏற்படுத்தும் கண்ணிவெடிகளும், 245 கனரக வாகனங்களுக்கு எதிரான கண்ணிவெடிகளும், 26,019 வெடிக்கும் நிலையில் உள்ள எச்சங்களும், 164,115 சிறிய ஆயுத வெடிமருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டு அழிக் கப்பட்டன.

ஜப்பான் நாட்டின் 13ஆவது வருடமாக டாஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தால் நிதியுதவி வழங்கப்படுகின்றது. ஜப்பான் நாட்டின் நிதி உதவியால் மாத்திரம் 6.4 சதுர கிலோமீற்றர் பரப்பு கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)



ஈழநாடு
Eelanadu
28.06.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தனிநபர்களால் ஓடக்கூடிய தூரம்?

பஸில் ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, இலங்கையின் முதல்தர வர்த்தகர்களில் ஒருவரான தம்மிக பெரேரா, நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது அவர் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நோக்கும்போது, அவரின் மூலம் நாட்டுக்கு முதலீடுகளை கொண்டுவர முடியுமென்று நம்புவது போல் தெரிகின்றது.

தம்மிக பெரேராவின், நியமனத்தோடு ஏராளமானவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டு விட்டனர். மூன்று தடவைகள் நிதி அமைச்சு மாற்றப்பட்டுவிட்டது. மத்திய வங்கியின் ஆளுநர் பதவி, இரண்டு தடவைகள் மாற்றப்பட்டுவிட்டது. பல நிறுவனங்களின் தலைவர்கள் மாற்றப்பட்டிருக்கின்றனர். ஆனால், நாட்டில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் வீதிகளில் நிற்கின்றனர். நிர்வாகம் முற்றிலுமாக சீர்குலைந்திருக்கின்றது. பொருட்களின் விலையேற்றத்தால் மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கிடையில், தான் தோற்றுப்போன ஜனாதிபதியாக பதவி விலகப் போவதில்லையென்று கோட்டாபய ராஜபக்ஷ கூறிக் கொண்டிருக்கின்றார். அரசாங்கத்தை வெளியேறுமாறு எதிர்கட்சிகள் கோரி வருகின்றன.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சை பொறுப்பேற்றபோது, அவர் பெரும் தந்திரங்கள் மிக்க திறமைசாலியாக காட்சிப்படுத்தப்பட்டார். அவரின் வரவுடன் டொலர்கள் குவிந்துவிடும் என்றவாறான கதைகள் புனையப்பட்டன. அதனை நம்புவதற்கும் ஒரு கூட்டம் இருந்தது. ஆனால், அவர் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, நாடு மேலும் மோசமடைந்தது. இறுதியில், அனைத்தையும் சரிசெய்யக்கூடிய ஒருவராக ரணில் விக்கிரமசிங்க அரங்குக்கு வந்திருக்கின்றார். ஆனால், அவரின் வரவின் பின்னரும் நிலைமைகளில் பெரியளவு மாற்றங்கள் ஏற்பட்டனவாகத் தெரியவில்லை. அதனை அவரும் ஒப்புக் கொள்கின்றார். நிலைமைகள் உடனடியாக சரிசெய்யக் கூடிய நிலையில் இல்லை என்கின்றார். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க கேட்டவுடன் உலகம் உடனே உதவிவிடப் போவதில்லை.

இது ஒரு விடயத்தை எடுத்துரைக்கின்றது. அதாவது, எந்த திறமைசாலி கதிரையில் அமர்ந்தாலும்கூட, நாட்டின் கட்டமைப்புக்கள் சீர்செய்யப்படாமல், விடயங்களை முன்னெடுக்க முடியாது. ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது வெறும் தனிநபர்களின் திறமையில் தங்கியிருப்பதில்லை. அனைவரின் திறமையையும் கையாளுவதற்கு ஏற்றவாறான, பொறிமுறைகள் இருக்க வேண்டும். அவை மக்களுக்கு பொறுப்புச் சொல்லக் கூடிய ஜனநாயக நெறிமுறகளால் நிர்வகிக்கப்பட வேண்டும். எனவே, கட்டமைப்புக்களை சீர்செய்யாமல் எவரை கதிரையில் அமர்த்தினாலும் நிலைமைகளில் பெரியளவு முன்னேற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

உண்மையில் விடயங்களை தனிநபர்களின் நோக்கில் சித்தித்ததன் காரணத்தால்தான், நாடு இவ்வாறானதொரு நெருக்கடிக்குள் வீழ்ந்திருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷச, நாமல் ராஜபக்ஷ இன்னும் பல குட்டி ராஜபக்ஷக்கள் - என்னும் தனிநபர்களின் வழியாகத்தான் ஆட்சியதிகாரம் நோக்கப்பட்டது. அனைத்துமே தனிநபர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமைவாகவே கையாளப்பட்டது.

இறுதியில், நாடு அதலபாதாளத்தை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்றது. இப்போது அந்த நிலையிலிருந்து மீள்வதற்கு வேறு தனிநபர்கள் அமர்த்தப்படுகின்றனர். நிச்சயம் இந்த அணுகுமுறை வெற்றியைக் கொடுக்கப் போவதில்லை. ஒருவேளை தற்காலிக நிவாரணத்தை கொடுக்கலாம். ஆனால், நாடு எதிர்நோக்கியுள்ள பாரதூரமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக மீண்டெழ வேண்டுமாயின், அதற்கு கட்டமைப்பு சார் மாற்றங்கள் தேவை. தனிநபர்களின் விருப்பங்களின் அடிப்படையில், நாட்டை நகர்த்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். ஆனால், நடைபெறும் விடயங்கள் எவையும் நம்பிக்கை தரக் கூடியனவாக இல்லை. முன் கதவால் சென்ற தனிநபர்கள் பலர், பின்கதவால் வர முயற்சிப்பதான சூழலே இப்போதும் காணப்படுகின்றது. இந்த நிலைமை தொடருமானால், எவ்வாறு நாடு நிமிர முடியும்?

# 'ஒட்சிசன் வழங்கியும் உயிர் பிழைக்க முடியாத நோயாளி' போல இலங்கை !

**அலசுவது இராஜதந்திரி**




இலங்கையிலிருந்து இந்திய அமைதிப் படையினர் வெளியேறியபோது அன்றைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ண தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து கருத்து வெளியிடுகையில் இப்படிக் கூறினார், "இறந்து கொண்டிருக்கும் ஒரு நோயாளிக்கு ஒட்சிசன் வழங்குவதற்கு ஒப்பானதாகவே இந்திய படையினரின் வெளியேற்றம் அமைந்துள்ளது".

இதன்மூலம், தமிழீழ விடுதலைப் புலிகள் மீளப்பலமடைவதற்கு இந்திய படையினரின் வெளியேற்றம் உதவுகின்றது என்ற அபிப்பிராயத்தையே ரஞ்சன் விஜயரட்ண அன்று வெளியிட்டிருந்தார். அவரின் கூற்று அன்று ஆயுதப் போர் குறித்ததாக இருந்தது.

ஆனால், இன்று இலங்கையின் பொருளாதாரம் முற்றிலுமாக முடங்கி ஓர் உயிர் துறக்கும் நோயாளி போல் இருக்கும் போது ஒட்சிசன் என்ற உதவி மேல் உதவிகளை வழங்கினால்கூட உயிர் காப்பாற்ற முடியாத நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இதுவரை இலங்கைக்கு உதவி வழங்கிய இந்தியாகூட தனது உதவிகளை தொடர்ந்து வழங்க முடியாதென்ற நிலைக்கே வந்துள்ளது. இதற்கு காரணம் இதுவரை வழங்கப்பட்ட உதவிகளில் பெரும்பாலான பகுதி எரிபொருளுக்காகவே செலவிடப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் ஏனைய துறைகள் முற்றிலுமாக முடக்கமடையும் அபாயகரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் என்பது பன்முகத்தன்மை வாய்ந்தது. பொருளாதாரம் என்பது வெறுமனே வர்த்தக நடவடிக்கைகளோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.

ஒரு நாட்டில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் அதுசார்ந்த பலதரப்பட்ட உணவு உற்பத்தி, போசாக்கு , கைத்தொழில் என்பவை எல்லாம் ஒரு பரந்துபட்ட பொருளாதார கட்டமைப்பாகவே ஒன்றுடன் ஒன்று சங்கிலிப் பிணைப்புப்போல அமைந்துள்ளது.

இத்தகைய பிணைப்பையும் அதில் ஒரு பகுதியில் ஏற்படும் தாக்கம் பொருளாதாராத்தின் அனைத்துத் துறைகளிலும் பிரதிபலிக்கும் என்பதை நன்கறிந்திருந்த நிலையில் ராஜபக்ஷ குடும்பம் கண்மூடித்தனமாக தனது சுயநலன்களைப் பாதுகாக்க முற்பட்டதே இன்று முழுநாடுமே ஒட்சிசன் வழங்கியும் உயிர்பிழைக்க முடியாத ஒரு நோயாளியின் நிலைக்கு வந்துள்ளது.

எரிபொருளுக்காகவும் சமையல் எரிவாயுவுக்காகவும் மக்கள் வீதிகளில் நிற்கின்ற பரிதாபகரமான நிலை ஒருபுறமிருக்க தற்போது பாடசாலைகளும் மூடப்பட்டு மாகாணங்களுக்கு இடையிலான நெடுந்தூர போக்குவரத்தும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுமென்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்தகையதொரு நிலை ஏற்படுமானால் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு உணவுப் பண்டங்களை கொண்டு செல்வது மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு செல்வது போன்ற நடவடிக்கைகளும் வெகுவாகவே பாதிக்கப்படும் என்றே கருத முடியும்.

இத்தகைய பின்னணியில் இலங்கை வெறுமனே நிதி உதவியாக வெறுமனே வெளிநாடுகளை நம்பி இராது அந்நாடுகளின் பொருளியல் நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்குவதே நல்ல அணுகுமுறையாக இருக்க முடியும்.


இலங்கையைப் பொறுத்தவரை கோட்டாபய ராஜபக்ஷ அரசு தனது ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலேயே மிகத்தவறான முடிவுகளை எடுத்தமை நாட்டின் பொருளாதார விடயங்களில் மட்டுமல்ல. வெளிநாட்டு உறவுகள் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் பலத்த பின்னடைவுகளுக்கு வழியமைத்துள்ளது.

றிப்பாக அயல் நாடான இந்தியாவுடனான வெளியுறவுக் கொள்கையை சரிவரப் பேணாது இந்தியாவின் நட்பு நாடற்ற சீனாவுடன் மகிந்த ராஜபக்ஷவும் அவரைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவும் நெருக்கமான உறவுகளை வளர்க்க ஆரம்பித்ததே இலங்கை தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பாக புரிந்த பெரும் தவறாக இருக்கின்றது.

சர்வதேச ரீதியாக அன்றைய சோவியத் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் நிலவியபோது சீனா பெரிதும் தனது அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக வெளிநாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட உறவுகளோடு ஒரு மூங்கில் திரை நாடாகவே இருந்தது. ஆனால், சீனத் தலைவரான டெங் சியாவோ பெங் சீனாவில் திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக அந்நாடு தற்போது அமெரிக்காவோடு சகல துறைகளிலும் போட்டியிடும் நாடாகவே மாற்றங்கண்டுள்ளது. அத்துடன், இந்தியா சீனாவுடனான அயலுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை "கீரியும் பாம்பும்" போலவே இருந்து வருகின்றது.

எனவே, இந்த சர்வதேச போட்டித் தன்மைக்கு ஈடுகொடுத்து இலங்கையின் சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறைகள் இருப்பதே இன்று இலங்கை முற்று முழுதாக முடமாகும் நிலைக்கு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுன் - 29 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 15
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். இழுபறியாக இருந்த செயல் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டு. புதிய முயற்சி லாபமாகும்.

**இடபம்**
கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. புதிய நபரிடம் எச்சரிக்கை அவசியம். பணியிடத்தில் உங்களது செல்வாக்கு உயரும். பிறரிடம் பாராட்டு வாங்குவீர்கள்.

**மிதுனம்**
மனக்குழப்பம் அதிகரிக்கும். எந்த ஒன்றிலும் ஒரு முடிவிற்கு வர முடியாமல் போகும். வேலைப்பளு கூடும். நினைப்பதை நிறைவேற்ற முடியாமல் போகும்.

**கடகம்**
வரவை விட செலவுகள் அதிகரிக்கும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. வெளியூர் பயணம் செல்வீர்கள். அலைச்சலும், செலவும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம்.

**சிம்மம்**
வராமல் இருந்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். பொருளாதார நெருக்கடி தீரும். பிரியமானவரை சந்தித்து மகிழ்வீர். எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். உயரும்.

**கன்னி**
உத்தியோகத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். உங்கள் எண்ணம் நிறைவேறும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிதமாகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
பிறரு நீண்ட நாளாக இருந்த பிரச்னை தீரும். உங்களது செயல்களில் தெளிவு உண்டாகும். யோசித்து செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
சில சங்கடங்களை சந்திப்பீர்கள். விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய நாள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. எதிர்பாராத சங்கடங்களை இன்று சந்திக்க நேரும். உங்களுடைய பணிகளை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

**தனுசு**
மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நண்பரின் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அகலும். சுறு சுறுப்பாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைபட்ட செயல்களை இன்று முடிப்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வரும்.

**கும்பம்**
உறவினர்களின் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும். நிதிநிலை உயரும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும்.

**மீனம்**
நிதானித்து செயல்பட வேண்டிய நாள். செயல்களில் கவனம் செலுத்த வேண்டும். பணியிடத்தில் டென்ஷன் அதிகரிக்கும். நண்பரின் ஆதரவு உங்கள் சங்கடத்தை அகற்றும். அரசு வழியிலான செயல்களில் கவனம் தேவை.

# தமிழகத்தில் காங்கிரஸ் முற்றாக அழிந்து விட்டது!

## பா. ஜ. கவின் தமிழக தலைவர்



சென்னை, ஜுன் 29

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி முற்றிலும் அழிந்துவிட்டதாக பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசை பா. ஜ. க. அமைத்த 8 ஆண்டு கால சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் கீழ்ப்பாக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் கே. அண்ணாமலை பேசியது -

ஊழல் நாடாக இருந்த இந்தியாவை சாதனை நாடாக பிரதமர் மோடி மாற்றியுள்ளார். பா. ஜ. க. அனைத்து மாநிலங்களிலும் ஆட்சியைப் பிடித்து வருகிறது. இந்தியாவில் யாராலும் வெல்ல முடியாத கட்சியாக பா. ஜ. க. வளர்ந்துள்ளது. குடியரசுத் தலைவர் தேர்லிலும் பா. ஜ. கதான் வெற்றிபெறும்.

குடியரசுத் தலைவர் வேட்பாளராக பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த திரௌபதி முர்முவை பா. ஜ. க. அறிவித்த உடனேயே முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. தி. மு. க. உண்மையான சமூக நீதி கட்சி என்றால் பா. ஜ. க. சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளரைத் தான் ஆதரிக்க வேண்டும்.

தமிழகத்தில் காங்கிரஸ் முற்றிலும் அழிந்துவிட்டது. தி. மு. கவின் கைப்பாவையாக காங்கிரஸ் மாறிவிட்டது. வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து பா. ஜ. க. சார்பில் 25 பேர் வெற்றி பெறுவர். அதுதான் பா. ஜ. கவின் இலக்கு. தமிழகத்தில் நிச்சயம் ஆட்சியில் அமரு வோம் - என்றார்.

(ஐ)

# பன்னீர்செல்வம் நிச்சயம் பா. ஜ. கவில் இணைவார்!

## முன்னாள் அமைச்சர் வளர்மதி

திருச்சி, ஜுன் 29

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் வலுத்துள்ள நிலையில், ஓ. பன்னீர் செல்வம் நிச்சயமாக பா. ஜ. கவில் இணைவார் என்று முன்னாள் அமைச்சர் வளர்மதி கூறியுள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் வளர்மதி பேசுகையில்,

எம். ஜி. ஆரின் ஆசீர்வாதத்தோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டிலிருந்து தி. மு. கவையும் அப்புறப்படுத்த வேண்டும் என்பதே.

எம். ஜி. ஆருக்கு பிறகு இந்த இயக்கத்தை திறமையுடனும், வலிமையாகவும் மக்களுக்கு நல்லாட்சியை வழங்கியவர் ஜெயலலிதா. அவருக்கு பிறகு இந்த இயக்கம் அழிந்துவிடும், ஒழிந்துவிடும் என்று நினைத்தவருக்கு எல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் அளவுக்கு எடப்பாடி பழனிசாமி சிறப்பான ஆட்சியை கடந்த 4 ஆண்டுகாலமாக வழங்கினார்.



முதலில்அ. தி. மு. கவின் சின்னத்தை முடக்க நினைத்தவர்களை எதிர்த்து போராடி மீண்டும் சின்னத்தை மீட்டெடுத்தவர் ஜெயலலிதா. அதன் பிறகு மீண்டும் கட்சி சின்னத்தை முடக்கியபோது அவற்றை மீட்டெடுத்த பெருமை எடப்பாடி பழனிசாமியையே சேரும். மேலும் ஓ. பன்னீர் செல்வம் கட்சியின் ஒருங்கிணைப்பாளராகவும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவராகவும் இருக்கிறார்.

இந்நிலையில், சட்டப் பேரவையில் தி. மு. க. முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்களை பாராட்டி பேசியிருக்கிறார். இதனைத் தொடர்ந்து அவருடைய மகன், ஸ்டாலினை நேரில் சந்தித்து பேசி இருக்கிறார். அ. தி. மு. கவின் கொள்கைப்படி திமுகவிடம் யார் உறவு வைத்துக் கொண்டாலும் அவர்களை உடனடியாக அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்பதுதான்.

கடந்த தேர்தல்களில் அ. தி. மு. க. தோல்வியை தழுவியதற்கு முக்கிய காரணம் இரட்டைத் தலைமைதான். ஆகையால் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் ஒற்றைத் தலைமையை ஏற்று வெற்றி பெற வேண்டும் என்பதே தொண்டர்களின் விருப்பம் ஆகும். தமிழகத்தில் தி. மு. கவை எதிர்த்து வலிமையாக கட்சியை வழிநடத்த வேண்டும் என்றால் அதற்கு ஒரே தலைமை அண்ணன் எடப்பாடி பழனிசாமிதான். பொது செயலராக பழனிசாமிதான் வரவேண்டும்.

ஓ. பன்னீர்செல்வத்தை அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்க வேண்டும் என்றால் அதற்கு பொதுக்குழு உறுப்பினர் தான் முடிவு செய்ய வேண்டும். ஓ பன்னீர்செல்வம் நிச்சயமாக பா. ஜ. கவின் இணைவார் - என்றார்.

(ஐ)

# பழனிசாமி தரப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு!

சென்னை, ஜுன் 29

அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் கடந்த 23ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடைபெற்றது.

இதில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஒப்புதல் அளித்த 23 தீர்மானங்களை தவிர வேறு தீர்மானங்கள் நிறைவேற்றக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த பொதுக்குழுவில், 23



தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும், அ. தி. மு. க. அவைத் தலைவராக தமிழ்மகன் உசைன் தெரிவு செய்யப்பட்டாரென அறிவிக்கப்பட்டது.

அடுத்த பொதுக்குழு வரும் ஜுலை 11இல் நடைபெறும் என தமிழ்மகன் உசைன் தெரிவித்தார். தீர்மானங்களை நிராகரித்தது மற்றும் அவைத்தலைவர் தேர்வு உள்ளிட்டவை நீதிமன்றை அவமதிக்கும் செயல் என ஓ. பி. எஸ். தரப்பு குற்றம் சாட்டி வழக்கு தொடர்ந்துள்ளது.

(ஐ)



# ஆஸி. செல்ல முற்பட்ட மேலும் 47 பேர் கைது!

கொழும்பு, ஜுன் 29

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட மேலும் 47 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புக்கு மேற்கு கடற்பரப்பில் வைத்தே 34 ஆண்கள், 6 பெண்கள் மற்றும் 7 சிறார்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆட்கடத்தல் காரர்கள் ஐவருடம் உள்ளடங்குகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வென்னப்புவ மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே, இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் ஆரம்பக் கட்ட விசாரணையின் பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் கடந்துள்ள 6 மாத கால பகுதிக்குள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 400 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவும் 2 பலம் மிக்க அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஜுன் 29

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலம் வாய்ந்த அரசியல் வாதிகள் இருவர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சிங்கள வார ஏடு ஒன்று வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அரசியல் வாதிகளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஆவர்.

ஒருவர் நீண்ட காலம் கேபினட் அமைச்சராக இருந்தவர். மற்றையவர் மாகாண சபையின் முதலமைச்சர் உட்பட பல உயர் பதவிகளை வகித்தவர் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# பலாலி சர்வதேச விமான நிலைய தொழிற்பாடுகளுக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜுன் 29

யாழ்ப்பாண பலாலி சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கு இடையிலான தொழிற்பாடுகளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை உடன்பாடு வெளியிட்டுள்ளது.

தென்னிந்திய விமான நிலையம் வரை வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கு அமைய, விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச மற்றும் உள்ளூரில் நிறுவப்பட்டுள்ள விமான நிறுவனங்கள் தற்போது கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இந்தநிலையில், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா இதற்கான படிமுறைகளை முன்வைத்திருந்தார். (அ)

# கோட்டா - ரணில் அரசு பதவி விலக வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்து



**கொழும்பு, ஜுன் 29**

**“நாடு இன்று முடங்கியுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுகின்றதாம். தம்மால் முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்துவிட்டனர். எனவே, கோட்டா - ரணில் அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும்.”**

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அநுரகுமார எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் நெருக்கடியால் மாணவர்களுக்குப் பாடசாலை செல்ல முடியவில்லை. மக்களுக்கு ஒரு நகரில் இருந்து இன்னுமொரு நகருக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதுள்ளது.

நோயாளிகளை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல வாகனம் இல்லை. இதனால் நாடு மேலும் வீழ்ச்சியடையும். எனவே, இந்த அரசு வீடு செல்ல வேண்டும்-என்றார். (அ)

# நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜுன் 29

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு வரைவு தயாரிப்பாளருக்கு அறிவுறுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ தனது பிரேரணையை அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு என்பது இலங்கைச் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்படாத காரணத்தினால், இந்த புதிய சட்டத்தின் அறிமுகமானது நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தையும், நீதி நிர்வாகத்தில் தலையிடும் வரம்புகள் மற்றும் கருத்து சுதந்திரத்தின் வரம்புகளையும் வரையறுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# நிதி அமைச்சராக மீண்டும் அலி சப்ரி?

கொழும்பு, ஜுன் 29

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பில் அரச தலைவருக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்க அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, நிதியமைச்சர் பதவியை மீளப் பொறுப்பேற்க அலி சப்ரியிடம் அரச தலைவர் கருத்துக் கேட்டுள்ளதாகவும், அதற்கு அலி சப்ரி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இடம் மாறுகின்றது அமைச்சு அலுவலகம்

கொழும்பு, ஜுன் 29

கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையத்தில் இருந்து சுற்றுலா அமைச்சின் அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, அரசாங்க செலவினங்களை குறைக்கும் நோக்கில் இதனை அரச கட்டடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ எடுத்த தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வெறிச்சோடி போயுள்ளன எரிபொருள் நிலையங்கள்

கொழும்பு, ஜுன் 29

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.பெர்னாண்டோ இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

டோக்கன் பெற்றபோதிலும், மறு அறிவித்தல் வரும் வரை எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் அவர் பொது மக்களிடம் கோரியுள்ளார்.

மேலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் இருப்பு கிடைத்தவுடன், டோக்கன் வைத்திருப்பவர்களுக்கு அதன் இருப்பு குறித்து தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# எரிபொருள் வழங்குமாறு கோரி கிராம அலுவலர்கள் கவனவீர்ப்பு

வடமராட்சி, ஜுன் 29

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி நேற்று செவ்வாய்கிழமை காலை 9. 00 மணியி லிருந்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றமுன்தினம் திங்கட்கிழமை சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து பிரதேச செயலகத்துக்கு போராட்டக்காரர்கள் அழைக்கப்பட்டு பேச்சு நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன், நேற்று மாலையே எரிபொருளும் வழங்கப்பட்டது.

இதையடுத்து கிராம அலுவலர்கள் அனைவரும் இன்று புதன்கிழமை தொடக்கம் தமது கடமைகளுக்கு திரும்புவதற்கு இணக்கம் தெரிவித்தனர். (ஐ-2)

# பாடசாலை சேவையையும் பகிஷ்கரித்த இ.போ.சவினர்

கிளிநொச்சி, ஜுன் 29

தமது கடமைகளுக்கு செல்ல எரிபொருள் பெற்று தருமாறு கோரி கிளிநொச்சி இ.போ.ச. பஸ் சாலை ஊழியர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த போராட்டம் காரணமாக பாடசாலை சேவையை முன்னெடுத்த அரச பஸ்ஸும் போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்த நிலையில் கிளிநொச்சி அக்கராஜன் பாடசாலைக்குச் சென்ற ஆசிரியர்கள் பஸ் சேவைக்காக 4 மணியை கடந்தும் சேவையை பெற முடியாது பாதிக்கப்பட்டனர். (அ)

# போராளிகளை விசாரிக்காமல் மாபியாக்களை கண்டுபிடியுங்கள்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஜூன் 29

**புணர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை தொந்தரவு செய்யாமல் எரிபொருளை பதுக்கும் மாபியாக்களை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் முன்வரவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பானது குழந்தைப் பிள்ளைத்தனமானது. இதனால் கடற்றொழி லாளர்கள்,அன்றாடம் காட்சிகள் விவசாயிகள்,உட்பட பலதரப்பினர் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுவர்.

ஏ.சி ரூமில் இருக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தன சாதாரணமக்கள் வரிசையில் நிற்கும் பரிதாபத்தை உணர்ந்திருப்பாரோ என்று தெரியவில்லை. அதிலும் பெண்கள் இந்த விடயத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.இன்று ஒருநேர சாப்பாட்டுடன் வாழ்வை கழிக்கும் அவல நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அந்த மக்களின் பரிதாப நிலையை அறியாது அமைச்சர் பந்துல இவ்வாறு அறிவித்திருப்பது ஏற்கமுடியாத கருத்தாகவே உள்ளது. எனவே இந்த நடைமுறையை அவர் உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.



அத்துடன் அனைத்து மக்களுக்கும் எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கான வசதியினை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்- என்றார்.

(அ)



# மக்களுக்குத் தலை வணங்கி கோட்டா பதவி விலகவேண்டும்

## நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 29

நுவரெலியாவில் எரிபொருள், சமையல் எரிவாயு, குழந்தைகளுக்கான பால் மா மற்றும் உணவுப் பொருட்கள் விலை உயர்வைக் கண்டித்தும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரியும், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா, உடபுசல்லாவை வீதியில் ஆவேலியா சந்தியில் நேற்று இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆவேலியா கிராம பொது மக்களும், இளைஞர் - யுவதிகளும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், ”எரிபொருள், எரிவாயுவைப் பெற்றுக்கொடு”, ”அடக்குமுறையை உடன் நிறுத்து!”, ”மக்களுக்குத் தலை வணங்கி கோட்டா உடன் பதவி விலகு!”, ”மருந்தும் இல்லை பால்மாவும் இல்லை பணமும் இல்லை” போன்ற கோஷங்களை எழுப்பினர்.(அ)

# இந்தியாவிலிருந்து பொருள் கொண்டு வருவதற்கு நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சிக்கல்!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூன் 29

இந்தியாவிலிருந்து பொருட்களை கொண்டு வருவதற்கு நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சிக்கல் காணப்படுவதாகவும், பொருட்களை ஏற்றி வர படகுகள் தயாராக உள்ளது - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் நிலவுவதால், அத்தியாவசிய தேவைகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் வழமைக்கு திரும்பி விடும் எனும் அடிப்படையில் தான் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு நான் கூறி வருவது போன்று இந்தியாவிலிருந்து அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதன் ஊடாக வடக்கு மாகாணம் அதற்கு மேலாக வடமத்திய மாகாணம் நன்மையை பெறும். அது விரைவில் நடைபெறும் என நம்புகிறேன் என தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பொருட்களை ஏற்றி வருவது தொடர்பில் அமைச்சரவையில் ஆதரவு கிடைத்துள்ளதா என ஊடகவியலாளர் வினவினார்.

அமைச்சர் கூறுகையில்-

அதில் எவ்விதமான தடையும் இல்லை. கடைசியாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்று கூறப்பட்டது. அதுவும் பெறப்பட்டுள்ளது.

ஆனால், நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே இழுபறி நிலை காணப்படுகின்றது. அதனை சீர்செய்வோமாக இருந்தால் எந்த நேரத்திலும் சரிவரும். அதற்காக படகுகள் தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.(அ)

# கிளிநொச்சி இ.போ. ச ஊழியர்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூன்19

கிளிநொச்சியில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு எரிபொருள் பெற்றுத் தருமாறு கோரி மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு அவர்கள் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் யாழ் மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடி அதற்கான ஏற்பாடு செய்து தருவதாக தெரிவித்ததை அடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக சேவையாற்றிவருபவரும்
பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு அழகு சேர்த்தவருமான
கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்
அவர்களின்
சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்
பாராட்டுப் பெருவிழா
For a truly inspirational teacher who has made such an impact in our community and spent her career changing lives.
We invite you to join us to honour
Mrs. Meena Thavaratnam
JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA
Saturday
July 2nd, 2022
6:30 PM



Organized by her former student and Canadian entrepreneur **Mr. Santha Panchalingam** in co-operation with the former students of Urumpirai.
உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின் மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும் வேண்டுகிறோம்.
அன்னாரது சேவையை கௌரவிக்கும் முகமாக ஒரு மலரினை வெளியிடவுள்ளோம். இதற்கான ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்கள் மே மாதம் 31ம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
On this day, we will be publishing a souvenir magazine to honour our teacher. If you would like to submit an article or greetings, please send it to us before May 31st, 2022.
உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com

# 6 மாதங்களுக்குள் முடியாவிடின் உடனடியாக பதவி விலகுவேன்!



## தம்மிக்க பெரேரா சூளுரை

கொழும்பு, ஜுன் 29

**"960 மணிநேரமே என் இலக்கு, அந்த காலப் பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதை யாவது செய்ய முடியாவிட்டால் பதவி துறந்து வீடு செல்வேன்." இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.**

அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"மக்கள் பட்டினியால் வாடினால், நாம் மட்டும் உண்பதில் அர்த்தம் இல்லை. ஆக, சென்று எதையாவது செய் எனக்கூறியே - அம்மா என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைத்தார்.

6 மாதங்களுக்குள் உங்களாலும் முடியாவிட்டால் - பதவி துறந்து வாருங்கள் என மனைவியும் அறிவுரை வழங்கியுள்ளார். அதேபோல 'தாத்தா கம் ஹோம்' (அப்பா வீட்டுக்கு வாங்க) - என பதாகை ஏந்தப்படும் என பிள்ளைகளும் அறிவித்துவிட்டனர்.

அந்தவகையில் எனக்கான காலம் 6 மாதங்கள். அதாவது 960 மணித்தியாலங்களே எனக்கு வேலை செய்வதற்கான நேரம். அந்த காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்யாவிட்டால், 'தாத்தா (அப்பா) கம் ஹோம்' எனக்கூறி பிள்ளைகள் வந்துவிடுவார்கள். அப்போது எனக்கு வீடு செல்ல வேண்டிவரும்.

என்னைபோல் ஒருவருக்கு 6 மாதங்களுக்குள் மக்களுக்கு முன்னேற்றகரமான - எதையாவது செய்ய முடியாவிட்டால், பதவி வகித்து என்ன பயன்?" - என்றார்.

அத்துடன், தனது பணி இலக்குகளையும் தம்மிக்க பெரேரா பட்டியலிட்டு ஆவணமொன்றை வெளியிட்டுள்ளார். டொலர்களை உள்ளீர்ப்பதற்கான வழிமுறைகளையும் பட்டியலிட்டுள்ளார்.

வங்குரோத்தடைந்த கம்பனிகளை பொறுப்பேற்று, அதனை கட்டியெழுப்பும் நிர்வாக திறன் உள்ள தனக்கு, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சவாலையும் வெற்றிகொள்ள முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். (அ)



# ஊடகவியலாளர் தரிந்து விசாரணைக்கு அழைப்பு

## எதிர்த்து நீர்கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, ஜுன். 29

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவை பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) விசாரணைக்கு அழைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

நீர்கொழும்பு - தெல்வத்தை சந்தியில் அமைந்துள்ள 'கோட்டா கோ கம' கிளை முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பங்கேற்றவர்கள் அரசின் நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பினர்.

அத்தோடு அரசுக்கு எதிராகப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (அ)

# அஞ்சல் அலுவலகங்களை வாரத்தில் 3 நாட்கள் மாத்திரம் திறக்க தீர்மானம்

## பணிப்பகிஷ்கரிப்புக்கு ஊழியர்கள் அழைப்பு

கொழும்பு, ஜுன். 29

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து சிரமங்களை கருத்திற்கொண்டு அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் நிலையங்களை வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் திறக்க அஞ்சல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தபால் திணைக்களத்தின் இந்த திடீர் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில்,ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி அவசர பணிப்பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே அஞ்சல் அலுவலகங்களை திறப்பதால், சனிக்கிழமை கொடுப்பனவு உள்ளிட்ட தொழிலாளர்களின் உரிமைகளை அஞ்சல் நிர்வாகம் குறைத்து வருவதால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# சுசில் பிரேமஜயந்த பிரான்ஸ் பயணம்

கொழும்பு, ஜுன். 29

யுனெஸ்கோ தலைமையகத்தில் நடைபெறவுள்ள கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நேற்றுக் காலை பிரான்ஸ் சென்றுள்ளார்.

இந்த மாநாடு இன்று வரை நடைபெறவுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாடசாலைக் கல்வியை இழந்த உலகின் பல நாடுகளில் உள்ள மாணவர்களின் நிலையான வளர்ச்சி இலக்குகளை உயர்த்துதல், தரமான கல்விக்கான நடவடிக்கைகளை எடுத்தல், கல்வி மறுசீரமைப்பு என்பன தொடர்பில் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

# மேல்மாகாண வாகனங்களின் உரிமையாளர்களுக்கு சலுகை

கொழும்பு, ஜுன். 29

மேல்மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் திகதி வரை மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக எவ்வித அபராதமும் அறவிடப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேல்மாகாண மோட்டார் வாகனத் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாக வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை இணையவழி முறையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குருந்தூர் மலையில் புத்தர் சிலை நிறுவலை தடுக்கப் போராடிய நபருக்கு அச்சுறுத்தல்!

யாழ்ப்பாணம், ஜுன்.29

குருந்தூர் மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில் அதனை தடுக்கப் போராடிய ஒருவருக்கு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 13ஆம் திகதி குருந்தூர் மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில் அந்த செயற்பாடு போராட்டம் மூலம் தடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 15ஆம் திகதி அந்த போராட்டத்தில் ஈடுபட்டவரை அச்சுறுத்தும் வகையில் இனந்தெரியாத நபர்கள் செயல்பட்டனர். குறித்த நபர் தனது வழமையான பணிகளை ஆற்றிவிட்டு வீட்டுக்குள் செல்லும் போது இரண்டு இனந்தெரியாத நபர்கள் மூலம் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டார். அவர்கள் இரண்டு பேரும் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குள் சென்றனர். இந்தப் பிரச்சினைக்கு பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர் இடம்பெயர்ந்து வேறுபகுதியில் வசிக்கின்றார்.

இது பற்றி பொலிஸாருக்கு அவர் முறைப்பாட்டை செய்திருந்ததுடன் எங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு இந்த விடயங்களை பதிவு செய்திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முற்பட்டபோது முல்லைத்தீவை சேர்ந்தவர் என்ற வகையில் வவுனியாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

உள்பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் சரத்வீரசேகர , எமது கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரனின் பெயரை பதிவு செய்ததுடன் ஏனைய தமிழ் தரப்புகளை பொது மக்களையும் தமிழ் அடையாளங்களை பாதுகாக்க இடங்களை பாதுகாக்க முற்படுகின்றவர்களையும் மிக மோசமான முறையில் நாடாளுமன்றத்தில் அச்சுறுத்தியிருந்தார். இது தொடர்பாக இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் அரசாங்கம் அடுத்ததாக தெரியவில்லை. ஜெனிவாவுக்கு ஜுலை மாதம் சென்ற பல கதைகளைக் கூற இருக்கும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போதைய நாட்டின் சூழலிலும் தமிழ் தேசத்தை அழிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் முனைப்பாக செயற்படுகிறது-என்றார்.



# இலவச பஸ் சேவை

திருமலை, ஜுன் 29

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி நேற்று முன்தினம் திங்கள் முதல் இரு பஸ் சேவைகளை அல் ஹிக்மத்துல் உம்மா பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையுடன் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த பஸ் சேவை கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நஸ்ஹர்கான் தலைமையில், அல்ஹிக்மத்துல் உம்மா பவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளரும், சமூக சேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது பஸ் சேவையானது கிண்ணியாவின் கிராமப்புறமான நடுவூற்று ஊடாக வான்எல வரை செல்கிறது.

இரண்டாவது பஸ் சேவையானது முள்ளிப்பொத் தானை வரை செல்கிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி இச்சேவை ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ)

# ‘மறப்போம் மன்னிப்போம்’

# ஜமால் கஷோகி படுகொலைக்குப் பின்பு முதன்முறை சவூதி இளவரசர் துருக்கி பயணம்!

## பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் துருக்கிக்கு உதவும் சவுதி இளவரசர்



பத்திரிகையாளர் ஜமால் கஷோகி படுகொலைக்குப் பிறகு துருக்கி நாட்டிற்கு சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் முதன்முறையாக பயணம் மேற்கொண் டார். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் துருக்கி, ஜமால் கஷோகி படுகொலையை மறந்து சவுதியின் உதவியை கைகுலுக்கி வரவேற்றுள்ளது.

சவுதி அரேபியா அரசையும் அந்த நாட்டு மன்னர் மற்றும் இளவரசர்களையும் கடுமையாக விமர்சித்து கட்டுரைகளை எழுதி வந்தவர் புகழ்பெற்ற பத்திரிகை யாளர் ஜமால் கஷோகி. இவர் கடந்த 2018ஆம் ஆண்டு துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப் பட்டார்.



### கசந்துபோன உறவு

உலகம் முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத் திய இந்த படுகொலையின் பின்னணியில் சவுதி அரே பியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் இருப்பதாக துருக்கி குற்றம் சாட்டியது. அவரை கைது செய்து சட்டத்தின் முன்பு நிறுத்த வேண்டும் எனவும் துருக்கி வலியுறுத்தியது. ஆனால் சவுதி அரேபிய அரசு இதனை திட்டவட்டமாக மறுத்தது.

சவுதி அரேபியா பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் உத்தரவின் பேரிலேயே ஜமால் கஷோகி படுகொலை செய்யப்பட்டதாக அமெ ரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் கூறி வந்தன. இந்த சம்பவத்துக்கு பின்பு சவுதி அரேபியா மற்றும் துருக்கி நாடுகளிடையே உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது. பெரும் மோதல் உருவானது.

இந்தநிலையில் சவூதி அரேபிய இள வரசர் முகமது பின் சல்மான் கைது செய்யப்பட வேண்டும் என வலியுறுத் திய துருக்கி நாட்டிற்கு அவரே அண்மை யில் அரசு முறை பயணம் மேற்கொண் டார். துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அதிபர் மாளிகையில் இளவரசர் சல்மானை துருக்கி அதிபர் எர்டோகன் வரவேற்றார். அப்போது இருவரும் கைகுலுக்கியதுடன் ஆரத் தழுவிக் கொண்டனர்.

பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய காலகட்டத்தை உருவாக்குவது குறித்து இரு நாடுகளும் உறுதியுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் வர்த்தகம் மற்றும் பாது காப்பு, எரிசக்தி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் ஒத்து ழைப்பை மேம்படுத்துவது குறித்தும் விவாதித்துள்ளன. துருக்கிய ஸ்டார்ட்அப்களில் முதலீடு செய்ய சவுதி முதலீடு செய்ய வருமாறு துருக்கிக் கேட்டுக் கொண்டுள்ளது.

துருக்கிய ஆயுதமேந்திய ஆளில்லா விமானங்களை சவுதிக்கு விற்பனை செய்வது குறித்தும் தலைவர்கள் விவாதித்தனர்.

கரன்சி ஸ்வாப் தொடர்பான பேச்சுவார்த்தைகள் - துருக்கியின் குறைந்து வரும் டாலர் இருப்பை மீட்டெ டுக்க உதவுவது என இரு தலைவர்களும் தெரிவித்துள்ள னர். பின்னர் எர்டோகன் மற்றும் பின் சல்மான் இருவரும் தனிப்பட்ட முறையிலும் பின்னர் பேசினர்.

### கடும் பொருளாதார நெருக்கடியில் துருக்கி

பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலைக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள சரிவு முக்கியமாக இரு நாடுகளின் வர்த்தகத்தையும் பாதித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 5 பில்லியன் டாலர்களாக குறைந்துள்ளது. அதே சமயம் துருக்கியின் பொருளாதாரம் சமீப காலமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

துருக்கி நாட்டின் வருடாந்திர பணவீக்க விகிதம் வெளியாகி யுள்ளது. துருக்கியின் வருடாந்த பணவீக்கம் மார்ச் மாதத்தில் 20 ஆண்டுகளில் அதிகபட்சமாக 61.14மூ ஆக உயர்ந்தது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகை யில் மார்ச் மாதத்தில் நுகர்வோர் விலைகள் 5.46 சதவீதம் அதிகரித்துள்ளதாக துருக்கிய புள்ளியியல் நிறுவனம் தெரிவித்துள்ளது. பிப்ரவரியில் ஆண்டு பணவீக்கம் 54.44 சதவீதமாக உள்ளது.

ரஷ்யா-உக்ரைன் மோதலால் துருக்கியில் கடுமை யான கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இதன் விலையும் உயர்ந்துள்ளது. துருக்கிய நாணயமான லிராவின் மதிப்பும் கடும் சரிவு கண்டு வருகிறது. இதனால் கடும் நெருக்கடியில் துருக்கி உள்ளது.

வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தவும், அரசியல் பிடியைத் தக்கவைக்கவும் சவுதி அரேபியாவுடனான உறவுகளை மேம்படுத்த துருக்கி அதிபர் எர்டோகன் விரும்புகிறார். அடுத்த ஆண்டு துருக்கியில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முன்பாக பொருளாதார சிக்கல்களை ஓரளவு குறைக்க வேண்டிய கட்டாயம் எர்டோகனுக்கு உள்ளது.

துருக்கியின் பொருளாதாரம் லிரா சரிவாலும், பண வீக்கம் 70 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து வருவதா லும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சவூதி நிதி மற்றும் டாலர்கள் வழங்குவது எர்டோகனுக்கு தேர்தலுக்கு முன்னதாக ஆதரவை அதிகரிக்க உதவும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



### வாய்ப்பை பயன்படுத்தும் சவுதி

இதுபோலவே சவுதி அரேபியாவும் இதில் ஆர்வம் காட்டி வருகிறது. துருக்கியுடனான உறவுகளை மேம் படுத்துவதன் மூலம் தனது பிராந்திய சக்தி பிம்பத்தை மீட்டெடுக்க விரும்புகிறது. தனது போட்டியாளராக உள்ள ஈரானை தனிமைப்படுத்த சவுதி முயன்று வருகிறது.

துருக்கியுடனான உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் சவுதி அரேபியா தனது போட்டியாளரான ஈரானின் மீது அழுத்தத்தை அதிகரித்து அந்த பகுதியில் புதிய அதிகார சமநிலையை உருவாக்க விரும்புகிறது.

இதுகுறித்து துருக்கி நாட்டின் மூத்த செய்தியாளர் கள் கூறுகையில் “2018 ஆம் ஆண்டிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமான




கட்டத்தை எட்டியது உண்மைதான். ஆயினும் மத்திய கிழக்கில் சவுதி அரேபியாவிற்கும் துருக்கிக்கும் இடையிலான பகை ஒஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தின் காலத்திலிருந்தே உள்ளது.

துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரண்டுமே, சன்னி முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட நாடுகளாகும். இரு நாடுகளுக்கும் இடையே போட்டி நிலவுவதும் உண்மையே. ஆனால் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் தற்போது இருநாடுகளையும் ஒரு



நேர்கோட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன. இருநாடுகளுமே புவிசார் அரசியலில் புதிய தேவையை முன்னிறுத்தி கைகோர்க்க தயாராகி விட்டன” எனக் கூறினர்.

இரு நாடுகளும் வர்த்தகம், விமானங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களின் திரையிடல் மீதான கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டதாகவும், பரஸ்பர எதிர்மறையான ஊடக விமர்சனங்கள் நிறுத்தப்படுவ தாகவும் துருக்கிய அதிகாரி தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதுமட்டுமின்றி எகிப்து மற்றும் ஜோர்டானிலும் பின் சல்மான் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். கோவிட் -19 மற்றும் ஜமால் கஷோகி கொலைக்குப் பிறகு, முகமது பின் சல்மான் இந்த பகுதியில் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். இந்த நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப்பயணமும் சவுதி அரேபியாவின் புவிசார் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

# பன்முக ஆளுமை மிகுந்த அதிபர் ஆனந்தராஜன்: கல்வித் துறையின் கலங்கரை விளக்கு ! யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் நல்ஆசான்!!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உயரிய இலட்சியங்களுக்காக மாணவர்களை நல்வழிப்படுத்த மனோதைரியத்தோடு தனிமையாக நின்று தன் வாழ்வை அர்ப்பணம் செய்த அதிபர் ஆனந்தராஜனின் வாழ்க்கையானது, யாழ் கல்வித்துறையின் புலமையை சர்வதேசத்துற்கு எடுத்துக் காட்டும் சான்றாக அமைகிறது. தமிழ் சமூகத்தில் நீதி, சகோதரத்துவம், அன்பு ஆகிய உயரிய இலட்சியங்களுக்காக அயராது உழைத்து, மாணவர்களுக்காக என்றும் மனோதைரியமாக செயலாற்றியவர்.

யாழ் பரியோவன் கல்லூரிக்கு நன்மை பயக்கும் எந்த காரியத்திற்கும் மனோதைரியமாக நின்று 'எமது அதிபர்' என்ற கூற்றுக்கு வரைவிலக்கணமாய் ஆசிரியர்களுக்கும் - மாணவர்களுக்கும் இடையே ஓர் ஆன்மீக பாலமாய், அதிபர் செ. எ. ஆனந்தராஜன் என்றும் விளங்கினார்.

ஒழுக்கம் என்றால் யாழ் பரியோவன் கல்லூரி என்ற உச்ச நிலைக்கு உயர்த்திய பெருமை யாழ் மண்ணின் கலங்கரை விளக்கான மறைந்த செ. எ. ஆனந்தராஜவையே என்றும் நினைவூட்டும். 1985 ஜூன் 26 இல் மறைந்த அதிபரின் நினைவு தினம் இவ்வாரம் நினைவுகொள்ளப்பட்டது.

மறைந்த அதிபர் செ. எ. ஆனந்தராஜன் ஒரு சிறந்த நல் ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பவர். ஆரோக்கியமான தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்க விழிப்போடிருந்தவர். அதனால் கற்பிக்கும் ஆசிரியர்களின் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தவர்.

சிறந்த பன்முக ஆளுமை மிக்க அதிபரின் கட்டுப்பாடில்லாமல் ஒரு பாடசாலையை திறம்பட வழி நடத்த முடியாது என்பதை நன்கறித்து பிறருக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தவர் அதிபர் செ. எ. ஆனந்தராஜன் அவர்கள்.

அவரது அயராத உழைப்பானது ஒவ்வொரு மாணவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. அவர் தனது மாணவரின் மீது அசையாத நம்பிக்கையை வைத்திருந்தார். மாணவர்களிடையே ஓர் ஆன்மீக பாலமாய், செ. எ. ஆனந்தராஜன் இப்பாடசாலைக்கு ஒரு சிறந்த அதிபராக, குடும்பத்திற்கு ஒரு சிறந்த தலைவனாக, சமூகத்திற்கு சிறந்த ஒரு வழி காட்டியாக மிளிர்ந்தவர். அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவரது மாணவர்களாகிய நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

மறைந்த ஆனந்தராஜன் அவர்கள் ஒரு கலைஞனும் கூட. மாணவர்களை உற்சாகப்படுத்துவதில் கருத்தாக இருப்பார். பாடசாலை நிகழ்வுகளிலே பழமொழிகள், உபகதைகள், மனம் நோகாத கிண்டல்களைப் பொருத்தமாகப் பொடிபோட்டு பேசுவார். அதனால் எட்ட நிற்பவர்களும் கிட்ட அவரை நெருங்கிடும் கவர்ச்சி கொண்டவர்,

ஒரு பாடசாலை அதிபருக்குரிய கடமைகள் பல. அப்பொதுவான கடமைகளுல் மேலும் சில சிறப்பான திறன் அதிபர் அவர்களுக்குள்ளதை நாமறிவோம். மாணவரின் கடமைத் தேவைகளை நிர்ணயிக்கும் போது பலரதும் கருத்திற் கொண்டு பரியோவன் கல்லூரிக்காக அயராது உழைத்தவர்.

கடினமான போர்க் கால சூழலிலும் திறமையான முடிவுகளை எடுப்பதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் அவருடைய திறமை அலாதியானது. அவர் மாணவர்களுக்கு ஆற்றிய சேவைகளே அதற்குச் சான்று.



அத்துடன் அவர் ஒரு சிறந்த நிர்வாக அதிபராக இருந்ததால், ஆசிரியர்களின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளையும், அதனால் ஏற்படும் குடும்பச் சுமைகளையும் நன்கு அறிந்திருந்தார். புதிய கல்வி, பாடத்திட்டம், கற்பித்தல் தொடர்பான கருத்தரங்குகள் - பயிற்சிகளில் பங்கேற்கவும், புதிய விஷயங்களை ஆராய்வதற்கும் கற்றுக்கொள்வதற்கும்

மாணவர்களை ஊக்கப்படுத்திய் அவரின் ஆர்வமும் முயற்சிகளும் அளப்பரியவை.

அதனால்தான், தன்னுடன் ஒத்துழைத்து பணிபுரியும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும், காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தில் மாற்றி பயிற்சி அளிக்கவும் ஆசிரியர்களை ஊக்குவித்தார். அத்தகைய தேவைகள் ஒவ்வொரு அதிபரின் உரிமையான கடமை என்பதை உணர்ந்து பணியாற்றினார்.

அதிபர் செ. எ. ஆனந்தராஜன் அவருக்கு இக்கல்லூரியோடு நீண்ட கால வரலாறு ஒன்றும்உள்ளது.

அத்துடன் தந்தையாராகிய திரு. ஜி. எஸ். செல்லையா அவர்களும் இக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். அதிபரின் ஆளுகையில் பள்ளி ஆசிரியர்களும் உளரீதியான முரண்பாடுகள் எதுவுமின்றி, அவரது பணிப்புரைகளை ஏற்று செவ்வனே செயலாற்ற முடிந்ததமையினாலேயே மாணவர்களின் திறமை மேம்பெற்றது.

அதிபர் அவர்கள் ஒவ்வொரு விடயத்திலும் மிக்க அவதானியாக இருந்தார். படிக்கும் மாணவர்களின் தவறுகளை மட்டுமன்றி உடல் உளக் குறைகளையும் ஆதரவோடு விசாரித்தறிந்து கொள்வார். அவர் நிர்வாகத்திறன் வாய்ந்தவர். கல்லூரியை நிர்வகிக்கும் ஆசிரியர்களையும் நன்கு மதிக்கவும் தெரிந்திருந்தார்.

மாணவர்களை எவ்விடத்தில் கண்டாலும் அழகாகப் முழுப் பெயர் சொல்லி அழைப்பார். அருகிலிருப்போர்க்கு அறிமுகம் செய்துவைப்பார். அவர் எமக்கு அதிபராக, தலைமை நிர்வாகியாக எந்தப் பிரச்சினையிலும் அவரை நாடினால் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கைக்குரிய கலங்கரை விளக்காக மிளிர்ந்தார்.

பரியோவன் பாடசாலை விழாக்களிலும், மற்றய நிகழ்வுகளிலும் அவரின் பேச்சுக்கள் பகடிக்கதைகளுக்கு நிரந்தர இடம் இருந்தது. விழாக்களில் மாணவரிற்காக அவர் பாடிய பாடல்கள் இனிமையானவை, கருத்தாளமிக்கவை, மாணவரை கவர்ந்தவை, ஆம் அவர் மாணவரின் ஒரு அபிமான அன்பான அதிபருமாவர்.

தனது பிள்ளைகளுக்கும் மட்டும் தகப்பனாக இருக்காமல், கல்லூரி விடுதியில் தங்கும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு அன்பு மிக்க அதே சமயம் கண்டிப்பான தந்தையாக காட்சியளித்தவர். பள்ளி விடுதி மாணவர்களின் குறைகளை நேரில் அறிவதற்கு அவர் விடுதி மாணவர் பிரதிநிதிகளை ஒவ்வொரு வாரமும் சந்தித்து குறைதீர்ப்பதும் அதிபரின் ஒரு சிறந்த அணுகு முறையாகும்.

மாணவர் மத்தியில் கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதில் அதிபர் மிகவும் கண்டிப்பானவர். அவர் அதிபராக இருந்த வருஷங்களில் இக்கல்லூரி பல துறைகளிலும் முன்னேறிய போதிலும், கட்டுப்பாட்டுக்கே பெயர்பெற்று மேலோங்கியது.

இக்கல்லூரியில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க விரும்பும் பெற்றோரை "நீங்கள் ஏன் இந்த கல்லூரியில் சேர்க்க விரும்புகிறீர்கள்" என்று கேட்டால், அவர்கள் சொல்வது "எங்கள் பிள்ளைகள் கட்டுப்பாடுடன் வளர்வதற்காகவே. வாழ்க்கையில் எத்துறையிலும் வெற்றியீட்டுவதற்கு அத்தியாவசியமான அத்திபாரம் கட்டுப்பாடே எனக் கூறுவார்கள்.

கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடித்த பொழுதிலும், அதிபர் கருணை மிகுந்த உளம் படைத்தவர். கல்லூரியிலும் சமுதாயத்திலும் தேவையிலிருக்கும் எவருக்கும் அயராது உதவி செய்தார்.மற்றவர்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையை மாணவரின் உள்ளத்தில் வளர்க்க ஐவெநச-யஉவ உடரபி, டுநழ ஊடரபி போன்ற சேவை கழகங்களை கல்லூரியில் உருவாக்கி உற்சாக மூட்டியவர். இக்கல்லூரியின் மாணவர் வருங்காலத்தில் பிறருக்கு சேவை செய்யும் ஆற்றல் உடையவராய் திகழ வேண்டும் என்பதே அவரது இலட்சியங்களில் முதன்மையானதாகும்.

மாணவர்களுடையே கண்டிப்பான ஆசிரியராக, அதிபராக, சிறந்த நிர்வாசியாகவுமிருந்தார். ஆயுனும் அவர் கனிவான நண்பராகவுமிருந் தார். கலைத்திட்ட ஆலோசகராகவுமிருந்தார். அதேவேளை புதிய அணுகு முறைகளை வரவேற்பவராகவுமிருந்தார். அவரிடம் ஆளுமை பலமுமிருந்தது. அதனாலவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவுமில்லை.


பரியோவன் பாடசாலைக்கு ஒரு சிறந்த அதிபராக, சமூகத்திற்கு சிறந்த ஒரு வழி காட்டியாக மிளிர்ந்தார். அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

............................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ........... ii) 18, 15, 12, .............., ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

...................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

....................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

....................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

...........................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



........................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**29.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**29.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காணாமல்போன முஸ்லிம்களுக்கு நிச்சயம் நீதி வழங்க்கபடவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் வலியுறுத்து

அம்பாறை, ஜூன் 29

சரணடைந்த, அல்லது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில் காணாமல் போனோர் அலுவலகம் நீதியான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் நேர்மையாக செயல்படவில்லை என ஐக்கிய காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இது சம்பந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சியினால் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் வாழ்ந்த பல முஸ்லிம்கள் 1983 முதல் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை எவருக்கும் தெரியவில்லை என்று அக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

1990 களில் முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசா, விடுதலைப்புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோர் தேனிலவு கொண்டாடிய காலத்தில் பலநூற்றுக்கனக்கான முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டனர். அதேபோல் பல இளைஞர்கள் சரணடையாவிட்டால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை கைது செய்வோம் என புலிகள் சொன்னதால் கல்முனை, மட்டக்களப்பு போன்ற ஊர்களில்



இருந்த விடுதலைப்புலிகளின் முகாம்களில் முஸ்லிம் இளைஞர்கள் சரணடைந்தனர். தமது மகன்மாருக்காக அவர்களின் தந்தை, சகோதரர்களும் பிணையாக சரணடைந்தனர். இவர்களில் எனது சகோதரர் அக்றம் ரிழாவும் ஒருவர். அவரை புலிகள் எமது வீட்டுக்கு வந்து கைது செய்தனர். ஆகவே இவை பற்றிய பூரண அறிவு எனக்கு உண்டு. இவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்று வரை தெரியவில்லை.

அதே போல் 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கல்முனையில் இருந்து காத்தான் குடி நோக்கி சென்ற 125 முஸ்லிம்கள் களுவாஞ்சிக்குடியை தாண்டியதும் குருக்கள் மடம் என்ற இடத்தில் வைத்து கடத்தப்பட்டனர். இவர்களில் எனது தந்தை அப்துல் மஜீத் மௌலவியும் ஒருவர். இவர்களுக்கும் என்ன நடந்தது என்றும் தெரியவில்லை.

ஆகவே இது விடயத்தில் மேற்படி அலுவலகமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் தலையிட்டு கடத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு என தனியான அலுவலகம் திறக்கப்பட்டு எமக்கான நீதி கிடைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். -என்றார். (அ)

# ஏழு ஆசிரியைகளின் இடமாற்றத்துக்கு தடை

## கல்முனை மேல் நீதிமன்றம் உத்தரவு

அம்பாறை, ஜூன் 29

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கல்முனை கல்வி வலையத்தில் கடமை புரியும் 07 ஆசிரியைகளுக்கு வேறு வலயங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு கல்முனை மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 பி (4) (பி)யின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மனு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ட்றொக்சி முன்னிலையில் கடந்த 24 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

குறித்த வழக்கில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி. நகுலேஸ்வரி பிள்ளைநாயகம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெ.அருளானந்தம் மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரி டப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்த மேல்நீதிமன்ற நீதிபதி குறித்த வழக்கை மீண்டும் 27 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த எழுத்தானை மனு மீண்டும் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டபோது மனுதாரர்கள் சார்பாக தோன்றிய சட்டத்தரணிகள் கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் பிரிவு 185 இன் கீழ் அங்கீகரிக்கப்படாத ஒரு இடமாற்றத்தை மனுதாரர்களுக்கு வழங்கியமை நியாயமற்றதும் சட்டமுரணானதுமாகும் என நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

குறித்த சமர்ப்பணங்களில் மீது திருப்தியுற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மனுதார்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கு இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதோடு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி மன்றில் தோன்ற பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்துள்ளார். குறித்த வழக்கில் மனுதாரர் கள் சார்பில் சட்டத்தரணி எம்.எம். நூர்ஜஹானின் அறிவுறுத் தலில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், சட்டத்தரணி காலித் முஹைமீன் மற்றும் சட்டத்தரணி முபாறக் முஅஸ் ஸம் ஆகியோர் தோன்றி இருந் தனர். (அ)

# மக்கள் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனு தாக்கல்

அம்பாறை, ஜூன் 29

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி எஸ். எஸ். எம். முஷாரப் தன்னை கட்சியி லிருந்து நீக்கியமை இயற்கை நீதிக்கு முரணானது என்ற அடிப்படையில் அக்கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சார்பாக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜராகியிருந்தார்.

கடந்த மே மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் யாப்புக்கு எதிராகவும் அதன் தீர்மானங்களுக்கு எதிராகவும் பாராளுமன்ற உறுப்பினர் செயற்பட்டார் என்று தெரிவித்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

மக்கள் காங்கிரஸ் கட்சியானது குறித்த பாராளுமன்ற உறுப்பினரினை கட்சியிலிருந்து நீக்கியமை தொடர்பாக இம் மாதம் முதலாம் திகதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருந்தது.

மேற்குறித்த ஒழுக்காற்று விசாரணை கட்சியின் பிரதித் தலைவர் சட்டத்தரணி என். எம். ஷஹீட் தலைமையில் இடம்பெற்றிருந்தது. 20 இற்கு ஆதரவளித்த மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம் மற்றும் இஷாக் ஏ. ரஹ்மான் போன்றவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று விசாரணைக்கான அழைப்பு கட்சியினால் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அவர்கள் மீதான எந்த விதமான நடவடிக்கையினையும் மக்கள் காங்கிரஸ் எடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தரப்பிலிருந்து கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள்

அம்பாறை, ஜூன் 29

பிரன்லி சிப் அமைப்பும் நியூ சன் ஸ்டார் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலையத்தினால் பதுளையிலுள்ள பிந்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு பதுளை பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும், சக்கர நாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

பதுளை சுகாதார வைத்திய அதிகாரி சுரேஸ்கண்ணண் இந் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில், சிறு வயதிலிருந்தே கண்களை கண் மருத்துவர் மூலம் பரிசோதித்துக்கொள்ள வேண்டும். கண்களில் ஏதேனும் குறைபாடு இருப்பது தெரியவந்தால் ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளலாம். ஆரம்பகட்ட சிகிச் சையை மேற்கொள்வது கண்களை பாதுகாக்கும் வழியாகும். வளர்ந்த குழந்தைகளையும் ஆண்டுக்கு ஒரு முறை கண் மருத்துவரிடம் காட்டி பரிசோதிப்பது அவசியம். புத்தகம் படிக்கும் போது எழுத்து வேளையில் ஈடுபடும் போது சரியான கோணம் போதிய அளவு வெளிச்சம் ஆகியன இருக்குமாறு பாத்துக் கொள்ள வேண்டும். நீண்ட நேரம் தொலைகாட்சி பார்ப்பது, கணினி விளையாட்டுகள், கைபேசி விளையாட்டுகள் போன்றவற்றில் ஈடுபடுவதால் கண்கள் சோர்வடைந்து கண்களின் விழித்திரையை பாதிக்கும். மாறுகண் ஏற்படுவதற்கான ஆபத்தும் இருக்கிறது.

கணினி துறையில் வேலை செய்பவர்கள் நீண்ட நேரம் கணினியை பார்த்துக்கொண்டு இருப்பதால் கண்கள் வறட்சி அடையும். எனவே அளவுக்கு அதிகமாக கண்களுக்கு வேலை தராதீர்கள். சில நேர இடைவெளியில் கண்களுக்கு பயிற்சி அளியுங்கள். வெளியில் சென்று வெளிப்பொருட்களை பார்த்து வாருங்கள். பசுமையான பொருட்களை சில நேரம் பாருங்கள். மேலும் விட்டமீன் ஏ உள்ள பழங்களை உண்ணுங்கள். அறிவொளி வளையம் 25 மாணவர்களுக்கு கண்களைக் கொடுத்துள்ளது. அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)





# திருமலை மாவட்டத்தில் வீட்டுத் தோட்ட செய்கை

திருமலை, ஜூன் 29

உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இளைஞர் கழகங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை நடவடிக்கை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

திருகோணமலை பீலியடி பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள கத்தரி, வெண்டி, கொச்சி மற்றும் மரவள்ளி போன்ற பயிர்கள் சிறப்பாக காணப்படுகின்றன.

இதற்கான பராமரிப்பு நடவடிக்கைகள் ஆலோசனை வழிகாட்டல்களும், பிரதேச வெளிக்கள விவசாய அதிகாரிகள் மற்றும் இளைஞர் சேவை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செய்கைகள் கந்தளாய், கிண்ணியா, வெருகல் மற்றும் மூதூர் போன்ற பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நேட்டோவின் அத்துமீறல்கள் உலகப்போருக்கு வழிவகுக்கும்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை


மொஸ்கோ, ஜூன் 29

கிரீமிய தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு நாடுகளின் எந்த அத்துமீறலும் ரஷ்யாவின் மீதான போர் பிரகடனத்துக்கு சமம். அது மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுக்கும் என்று ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வடேவ் எச்சரித்துள்ளார்.

எங்களைப் பொறுத்தவரை கிரிமியா ரஷ்யாவின் ஒரு பகுதியாகும். கிரிமியாவை ஆக்கிரமிக்கும் எந்தவொரு முயற்சியும் நம் நாட்டுக்கு எதிரான போர் பிரகடனமாகும் என்று மெட்வெடேவ் சர்வதேச செய்தித் தளம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

கிரீமியா தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு நாடு ஒன்று அத்துமீறினால் அது நேட்டோ கூட்டணியுடனான மோதலாக மாறும். இது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும். இதனால் ஒரு முழுமையான பேரழிவு ஏற்படும் எனவும் டிமிட்ரி மெட்வடேவ் தெரிவித்தார்.

பின்லாந்தும் சுவிடனும் நேட்டோவில் இணைந்தால் ரஷ்யா தனது எல்லைகளை வலுப்படுத்தும். எந்த



வொரு பதிலடி நடவடிக்கைகளுக்கும் தயாராக இருக்கும். அத்துடன் இஸ்கண்டர் ஹைபர்சோனிக் ஏவுகணைகளை பின்லாந்து, சுவிடன் எல்லைகளில் நிறுத்தும் நிலை ஏற்படும் எனவும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வடேவ் எச்சரித்தார்.

# இளைஞரின் வயிற்றிலிருந்து நாணயங்கள், பற்றரிகள் மீட்பு

## துருக்கியில் மருத்துவர்கள் அதிர்ச்சி

அன்காரா, ஜூன் 29

துருக்கியில் சுமார் நூற்றுக்கணக்கான நாணயங்கள், நகங்கள், பற்றரிகள் நோயாளியின் வயிற்றில் இருந்தது மருத்துவர்களை அதிர்ச்சியடையச் செய்தது.

துருக்கியில் 35 வயதான நபர் ஒருவர் வயிற்று வலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவர்கள் எண்டோஸ்கோபி செய்து பார்த்தபோது பெரும் அதிர்ச்சி அடைந்தனர். அந்த நோயாளியின் வயிற்றில் 233 நாணயங்களும், ஏராளமான நகங்களும், பற்றரிகளும், கற்களும் கண்டறியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, அந்த நபருக்கு நடத்தப்பட்ட அறுவை சிகிச்சையில், அவரது வயிற்றிலிருந்து அனைத்து பொருட்களையும் மருத்துவர்கள் நீக்கினர். இந்தப் பொருட்கள் எவ்வாறு நோயாளியின் வயிற்றில் சென்றன என்பது குறித்த விவரம் எதுவும் இது வரை வெளியாகவில்லை என்று துருக்கி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறுவை சிகிச்சை குறித்து மருத்துவர் பெனிசி கூறும்போது, “பெரியவர்களுக்கு இந்த மாதிரியான நிலையை நாங்கள் பார்த்தது இல்லை. அவரது வயிற்றில் இருந்த நாணயங்கள், நகங்கள், கற்கள், ஸ்க்ரூக்கள், கண்ணாடிகள் என அனைத்தும் முற்றிலுமாக நீக்கப்பட்டன. அவர் நலமாக இருக்கிறார்” என்று தெரிவித்தார். (ஐ)

# வணிக வளாகம்மீது தாக்குதல் 16 பேர் மரணம் 59 பேர் காயம்!



கீவ், ஜூன் 29

மத்திய உக்ரைன் கிரெமென்சுக் நகரில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 59 பேர் காயமடைந்தனர். பரபரப்பான வணிக வளாகம் மீது திங்கட்கிழமை இரண்டு ரஷ்ய ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதன்போது வணிக வளாகத்தில் 1,000 க்கும் மேற்பட்டோர் இருந்த தாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறினார்.

ஏவுகணை தாக்குதலை அடுத்து வணிக வளாகத்தில் பெரும் தீ பரவல் ஏற்பட்டது. வானத்தை நோக்கி கரும் புகை எழுந்ததாக சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் தெரிவித்தனர். தாக்குதலில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டனர். 59 பேர் காயமடைந்தனர் என்று உக்ரைன் அவசர சேவை துறை அதிகாரிகள் உறுதி செய்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அங்கு விரைந்த மீட்புக் குழுவினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு முன்னர் கிரெமென்சுக் சுமார் 217,000 பேர் வசிக்கும் தொழில் நகரமாக இருந்தது. பொல்டாவா பகுதியில் டினிப்ரோ ஆற்றை அண்டி அமைந்துள்ள இந்த நகரம் உக்ரைனின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு தளமாகும்.

கிரெமென்சுக் நகரில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என நம்பப்படுகிறது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# அமெரிக்காவில் லொறியில் 46 சடலங்கள் மீட்கப்பட்டன!

நியூயோர்க், ஜூன் 29

அமெரிக்கா - டெக்சாஸ் மாகாணம், சான் அன்ரனியோ புறநகரில் கைவிடப்பட்ட சரக்கு கொள்கலன் லொறி ஒன்றுக்குள் இருந்து 46 சடலங்கள் மீட்கப்பட்டன.

இவர்கள் அனைவரும் சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்து வேறு இடத்துக்கு நகர முயன்றவர்கள் என நம்பப்படுகிறது. ஆட்கடத்தல்காரர்களால் இவர்கள் சரக்கு கொள்கலனில் ஏற்றி கடத்தப்பட்ட நிலையில் வெப்ப அதிர்ச்சி மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொள்கலன் லொறிக்குள் இருந்த நான்கு குழந்தைகள் உட்பட 16 பேர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிர் பிழைத்தவர்களின் உடல்கள் மிகவும் சூடான நிலையில் இருந்தன. அவர்கள் வெப்ப அதிர்ச்சி மற்றும் வெப்ப சோர்வு ஆகியவற்றால் அவதிப்பட்டனர் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.



அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் இருந்து 250 கி.மீ. தொலைவிலுள்ள சான் அன்ரனியோ, ஆட்கடத்தல்காரர்களுக்கான முக்கியமான போக்குவரத்துப் பாதையாக உள்ளது.

ஆட்கடத்தல்காரர்கள், ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் அமெரிக்க எல்லைக்குள் நுழைந்த பிறகு, அவர்களை தொலைதூரப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல இவ்வாறான சரக்கு கொள்கலன் லொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

உள்ளூர் நேரப்படி திங்கட்கிழமை மாலை சுமார் 6 மணியளவில் இறந்தவர்களைப் பற்றிய தகவலறிந்த கிடைத்தன. இதன் பின்னர் சம்பவ இடத்துக்கு வந்ததாக சான் அன்ரனியோ தீயணைப்புப் பிரிவின் தலைவர் சார்ள்ஸ் ஹூட் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒரு லொறியைத் திறக்கும்போது அதற்குள் இத்தனை இறந்த உடல்களை பார்த்தது அதிர்ச்சியளித்தது என சார்ள்ஸ் ஹூட் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சரக்கு கொள்கலன் லொறியில் சாரதி தப்பியோடியுள்ளார். லொறிக்குள் குளிரூட்டும் வசதியில்லை. அதற்குள் குடிநீர் கூட இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஜோர்தானில் விஷவாயு கசிவு; 10 பேர் மரணம் 251 பேர் பாதிப்பு

அகாபா, ஜூன் 29

ஜோர்தான் நாட்டின் துறைமுகத்தில் விஷவாயு கசிந்தது 10 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜோர்தானின் தெற்கு துறைமுக நகரம் அகாபா. இங்கு தான் இந்த சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது. மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 251 பேருக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அந்நாட்டு செய்தித் தொடர்பாளர் பைசல் அல்-ஷாபூல் உறுதிப்படுத்தியுள்ளார்.

விஷ வாயு நிரப்பப்பட்ட தொட்டி கொண்டுசெல்லும் போது விழுந்ததில் கசிவு ஏற்பட்டு விபத்து உண்டானது. விஷ வாயு கசிந்ததால் உடல்நலக் குறைவு ஏற்பட்டவர்களை அங்கிருந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பின்னர் அந்த பகுதிக்கு அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், வாயு கசிவு ஏற்படாமல் இருக்க, நிபுணர்களை அனுப்பி வைத்துள்ளது ஜோர்தான் அரசு. அதேநேரம், அகாபா பகுதி பொதுமக்கள் வாயு கசிவில் பாதிக்கப்படாமல் இருக்க யன்னல்கள் மற்றும் கதவுகளை மூட அந்நாட்டு அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். அருகிலுள்ள குடியிருப்பு



பகுதி 25 கி. மீ. தொலைவில் உள்ளது. இதனால் பாதிப்பு பெரிதாக இருக்காது என்று தெரிகிறது.

முன்னதாக, வாயு கசிவு தொடர்பாக வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. அதில், ஒரு பெரிய உருளை போன்ற ஒன்று கிரேனிலிருந்து கீழே விழுந்து கப்பல் ஒன்றின் மேல் தளத்தில் மோது கிறது. அதைத் தொடர்ந்து மஞ்சள் நிற வாயு புகை மண்டலமாக வெளியேறுகிற காட்சிகள் வெளியாகியுள்ளன.




# நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடர் இங்கிலாந்து வசம்!

லீட்ஸ், ஜூன் 29

நியூசிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து 3 போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாகக் கைப்பற்றியிருக்கிறது அந்த அணி.

கடைசி டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, முதல் இனிங்ஸில் 117.3 ஓவர்களில் 329 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக டரில் மிற்செல் 109 ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜேக் லீச் 5 விக்கெட்கள் சாய்த்தார்.

அடுத்து இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 67 ஓவர்களில் 360 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பெயர்ஸ்ரோ 162 ஓட்டங்கள் விளாச, நியூசிலாந்து தரப்பில் டிரென்ட் போல்ட் 4 விக்கெட்கள் கைப்பற்றினார்.

பின்னர் 31 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இனிங்ஸை ஆடிய நியூசிலாந்து, 105.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து, 326 ஓட்டங்கள் எடுத்தது. ரொம் பிளண்டெல் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இங்கிலாந்தின் ஜக் லீச் மீண்டும் 5 விக்கெட்கள் சாய்த்தார்.

இறுதியாக 296 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து, 54.2 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புடன் இலக்கை எட்டியது. ஒல்லி போப் 82 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழக்க, ஜோ ரூட் 86, பெயர்ஸ்ரோ 71 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நியூசிலாந்தின் ரிம் சௌதி, மைக்கேல் பிரேஸ்வெல் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

(ஐ)

# அதிக ஓட்டம் குவித்த வீரராக பெயர்ஸ்ரோ!

லண்டன், ஜூன் 29

2022 ஆம் ஆண்டின் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற சாதனையை இங்கிலாந்து வீரர் ஜொன்னி பெயர்ஸ்ரோ பெற்றுள்ளார்.

இங்கிலாந்து வீரர் பெயர்ஸ்ரோ 774 ஓட்டங்களை குவித்து 2022 டெஸ்ட் போட்டியில் முதலிடம் பிடித்துள்ளார். இதில் 4 சதங்கள், ஓர் அரைச்சதம் அடங்கும்.

2022 டெஸ்டில் அதிக ஓட்டங்களை எடுத்தவர்களின் விவரம்:

பெயர்ஸ்ரோ (இங்கிலாந்து) - 774
ஜோ ரூட் (இங்கிலாந்து) - 754
உஸ்மான் கவாஜா (ஆஸி.) - 751
லிற்றன் தாஸ் (பங்களாதேஷ்) - 659
டரில் மிற்செல் (நியூசிலாந்து) -641





# பத்து - 10 கிரிக்கெட்டில் ஆட தயாராகிறார் கெயில்!

அன்டிகுவா, ஜூன் 29

மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெயில் சி. பி. எல்லின் இருபது -20 போட்டியிலிருந்து விலகி பத்து - 10 தொடருக்கு தயாராகிறார்.

‘கரிபீயன் பிறீமியர் லீக்’ என்னும் இருபது - 20 போட்டிகளில் இருந்து கிறிஸ் கெயில் விலகி ‘6க்ஸ்ரி’ எனப்படும் பத்து - 10 தொடருக்கு தயாராகி வருகிறார்.

“இந்த வருடம் குறைந்த ஓவர்கள் கொண்ட போட்டிகளில் நான் விளையாட இருக்கிறேன். நான் உண்மையிலேயே இந்த 6க்ஸ்ரியின் புதுமையான முயற்சியில் விளையாட ஆவலாக உள்ளேன். குறிப்பாக முதல் 12 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடித்து 3ஆவது ஓவரை பவர் பிளேவாக மாற்றும் விதி இருப்பதால் அதை உபயோகிக்க வேண்டுமென நினைக்கிறேன்” என்று கிறிஸ் கெயில் தெரிவித்தார்.

(ஐ)

# நியூசிலாந்தை வெள்ளையடித்து பென் ஸ்ரோக்ஸ் புதிய சகாப்தம்!

லீட்ஸ், ஜூன் 29

உலக டெஸ்ட் சம்பியனான நியூ சிலாந்து அணியை மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் வென்று, தொடரை வெள்ளையடிப்பு செய் துள்ளது இங்கிலாந்து அணி. புதிய டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் தலைமையில் புதிய சகாப்தத்தை தொடங்கியுள்ளது அந்த அணி.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, இங்கிலாந்து நாட்டில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

புதிய அணித் தலைவர், புதிய பயிற்றுவிப்பாளர் என புதுப்பாய்ச்சலோடு இந்தத் தொடரை அணுகி இருந்தது இங்கி லாந்து அணி. லோர்ட்ஸ், டிரெண்ட் பிரிட்ஜ் மற்றும் லீட்ஸ் என மூன்று மைதானங்களில் இந்தத் தொடர் நடைபெற்றது. மூன்றிலும் வரிசையாக வாகை சூடியது இங்கி லாந்து.

ஜோ ரூட், பெயர்ஸ்ரோ, போப், பென் ஸ்ரோக்ஸ், பட்ஸ், லீச், பிரொட், அண்டர்சன் போன்ற வீரர்கள் இங்கிலாந்து அணியின் வெற்றியில் பெரும் பங்கு வகித்த னர். இந்த தொடருக்கு முன்னர் நடைபெற்ற 9



டெஸ்ட் போட்டிக ளில் ஆறு போட்டிகளில் தோல்வியை தழுவியிருந்தது இங்கிலாந்து அணி. உள்நாடு, வெளிநாடு என எங்கு சென்றாலும் தோல்வி என்ற நிலை மட்டும் இங்கிலாந்துக்கு மாறவில்லை.

இந்நிலையில், நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரை வெள் ளையடிப்பு செய்து புதிய சகாப் தத்தை தொடங்கியுள்ளது பென் ஸ்ரோக்ஸ் தலைமையிலான இங்கி லாந்து அணி.

(ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ்; ஜோகோவிச் வெற்றி!

லண்டன், ஜூன் 29

இங்கிலாந்தில் நேற்றுமுன்தினம் தொடங்கிய கிராண்ட் ஸ்லாம் போட்டியான விம்பிள்டனில், சேர்பி யாவின் நோவக் ஜொகோவிச், துனீசியாவின் அன்ஸ் ஜாபியூர் ஆகியோர் முதல் சுற்றில் வென்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவரும், நடப்புச் சம்பியனு மான ஜொகோவிச் 6-3, 3-6, 6-3, 6-4 என்ற செற்களில் தென் கொரியாவின் வோன் சூன் வூவை வீழ்த்தினார்.

இங்கிலாந்தின் கமரூன் நோரி 6-0, 7-6 (7/3), 6-3 என்ற செற்களில் ஸ்பெயினின் பாப்லோ அண்டு ஜாரை வென்றார். இதர ஆட்டங் களில் நோர்வேயின் கஸ்பர் ரூட், அமெரிக்காவின் ரொம்மி போல் உள்ளிட்டோர் வென்றனர்.



(ஐ)

( இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி )
63 COLLEGE ROAD, NEERAVIYADI, JAFFNA

Date: 2 July, 2022
Time: 4:00 – 6:00 PM
Date: 3 July, 2022
Time: 4:00 – 6:00 PM

Contact: 075 814 3414,
077 897 0509, +1 201 417 2986

## Music of Spirit
Team presents
## ஆத்ம இசை
குழுவினர் வழங்கும்

*Come and Enjoy Your Spirit!*
*Indian Cultural Music and Dance program*
*வருக ஆத்ம அனுபவம் பெறுக!*
இந்திய கலாச்சார இசை, நடன நிகழ்ச்சி



H. H. SHRI MATAJI NIRMALA DEVI

**இந்திய இசை மேதைகளும், பல வருட சகஜ யோகா தியான அனுபவம் கொண்ட சகஜ தொண்டர்களும் இலங்கை வருகிறார்கள்.இலங்கை மக்களை காண தமது சொந்த செலவில் மூன்று கிழமை இலங்கை வருகிறார்கள். இசை கலைஞர்கள் இசை மேதைகள் மட்டுமல்ல சகஜ யோகா தியானத்தில் வளர்ந்தவர்கள். சகஜ தொண்டர்கள். இலங்கை மக்களின் இன்றய நிலையில் அவர்களின் உள்ளங்களில் அன்பையும் அமைதியையும் இசைமூலம் பகிர்ந்துகொள்ள வருகிறார்கள்.**

**இருபதுக்கு மேற்பட்ட சகஜ தொண்டர்கள் ( தமிழ் பேசுபவர்கள் பலர் உட்பட) வருகிறோம்.**



**Pt. Dhananjay Dhumal**
International Harmonium Player,
Bollywood Music Director



**Anandita Basu**
Sufi, Qawwali, Classical, bhajan
and Spiritual Bollywood Singer



**Lata Didi Dhumal**
Famous Bollywood Singer,
Folk & Devotional Singer

## *Get your Self Realization through SAHAJAYOGA*

Music with Bhakti, Dance with Bhava. Together,
Enlighten our minds, Uplift our souls, and enhances our life.

**சகஜ யோக மூலம் உங்கள் ஆத்ம விழிப்புணர்வு பெறுங்கள்**

**பக்தியோடு கூடிய இசை, பாவனையோடு கூடிய நடனம், ஒன்றிணைந்து,
நம் மனதை உள்ளத்தை ஒளிரச் செய்ய,
வாழ்வை மேம்படுத்தும் ஆத்மா உயர்விற்காக.**

2. Place: Devanayagam Hall, (தேவநாயகம் மண்டபம் )
   Pioneer Road, Arasady, Batticaloa
   Date: 5 July, 2022 Time: 4:00 – 6:00 PM
   Contact: 078 441 8540
3. Place: Hindu Cultural Center, (இந்து கலாச்சார நிலையம்)
   348 Peradeniya Road, Kandy
   Date : 10 July, 2022 Time: 4:15 - 6:15 PM
   Contact: 077 791 1886
4. Place: Cine citta Town Hall,
   (சினி சிடா நகரசபை மண்டபம்) Nuwara Eliya
   Date: 12 July, 2022 Time: 3:00 – 5:00 PM
   Contact: 075 700 2009
5. Place: Sri Thandayuthapani Swami Thevasthanam,
   (ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்த்தானம்) Bogawantalawa
   Date: 13 July, 2022 Time: 3:00 – 5:00 PM Contact: 071 606 6118
6. Place: Rama Krishna Mission Hall,
   (ராம கிருஷ்ண மிஷன் மண்டபம்) Wellawatta, Colombo 6
   Date: 16 July, 2022 Time: 5:00 – 7:00 PM, Contact: 077 513 1771
7. Place: Elphistone Theatr (Near Maradana Railway Station)
   Colombo - 10
   Date: 17 July, 2022 Time: 6:00 – 8:00 PM
   Contact: 077 513 1771

**YOU ALL ARE CORDIALLY INVITED**
**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

**FREE ENTRY**
**அனுமதி இலவசம்**

# பெருந்தோட்ட மக்களுக்கு சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன். 29

பெருந்தோட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சதொச மற்றும் கூட்டுறவு நிலையங்கள் ஊடாக இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே சுட்டிக்காட்டினார். (அ)

# எரிபொருள் பதுக்கிய மூவர் கைது

கொழும்பு, ஜூன். 29

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெமேரியாவத்த பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி எரிபொருள் பதுக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறையை சேர்ந்த 40 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 60 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஹல பியன்வல பகுதியில் சட்டவிரோதமாக எரிபொருள் பதுக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 460 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடவத்தையை சேர்ந்த 48 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எத்திமலே பகுதியிலும் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த 60 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 1220 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

## உயர்கிறது...

குறைந்தபட்ச பஸ் கட்டணமாக 40 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## ஜூலை 1...

வாக அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு ஜூலை 1 முதல் 10ஆம் திகதி வரை குறிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களுக்கான எரிபொருள் இந்நாட்களில் விநியோகிக்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் காத்திருப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். போதுமான எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (அ-03)

## எரிபொருள்...

செய்கின்றன. நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக நாட்டுக்கு தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வது பெரும் சவாலாக மாறியுள்ளது. எனவே, எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள நிறுவனங்களுடன் நீண்டகால ஒப்பந்தங்களில் ஈடுபட்டு நாட்டின் அந்நிய செலாவணிக்கு அழுத்தம் கொடுக்காத வகையில் அவர்களின் நிதியைப் பயன்படுத்தி எரிபொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்வது ஏற்றதாகக் கருதப்பட்டது - என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை...

நிலநடுக்கத்தின் பின்னரும் நிவாரணப் பொதிகளை வழங்கிய முதல்நாடு இந்தியாதான். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய எமது அயல்நாடான இலங்கைக்கும் உதவுகிறோம்.

உலகின் பதற்றத்தால், எரிபொருள், உணவு தானியங்களின் விலைகள் உயர்கின்றன. இவை உலக நாடுகள் அனைத்தையும் பாதிக்கின்றன. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஜப்பான்...

தலைவர் மாவை சேனாதிராசா, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை...

அமெரிக்க ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு 20 மில்லியன் டொலர் கூடுதல் உதவி வழங்குவதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்திருப்பது, உணவுப் பாதுகாப்பு, பொது சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை நிரூபிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் குறிப்பிட்டார். (அ)

## எம். பிக்களைக்...

கொல்லப்பட்டனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு எம்.பிக்கள் சிரமப்படுகின்றனர் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட எம். பி. ஒருவர் ஒருநாள் அமர்வில் கலந்துகொள்வதற்கு 62,000 ரூபாயும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு 42, 000 ரூபாயும் செலவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## எரிபொருள் விநியோகம்...

டுள்ளது.

மீண்டும் எப்போது எரிபொருள் வழங்கப்படும் என்பது குறித்து எந்தத் தகவலும் தெரிவிக்கப்படாமலே விநியோகம் நிறுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## எரிபொருள் பிரச்னை குறித்து

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ். அரச அதிபருடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன். 29

பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கள்ளச்சந்தை மாபியாக்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், சாதாரண மக்கள் எரிபொருட்களை பெறுவதை அவர்கள் தடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அண்மைய சில நாட்களாக மக்கள் எரிபொருளைப் பெறுவதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர். இந்த நெருக்கடிகளுக்கு கள்ளச்சந்தை மாபியாக்களும் காரணம் என பல வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

இதன்போது எரிபொருள் நிலையங்களில் நிலவும் பிரச்சனைகளை தீர்த்து, மக்கள் எரிபொருளை பெறுவதை இலகுபடுத்துவதற்காக தங்களால் இயன்றதை செய்வதாக அரசாங்க அதிபர் உறுதியளித்ததாக இந்தச் சந்திப்பின் பின் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (அ)

# பாடசாலை வர முடியாத மாணவரை ஏற்றியிறக்க பஸ் சாரதியாக மாறினார் பாடசாலையின் அதிபர்!



கொழும்பு, ஜூன். 29

எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைக்க வருவதில் சிரமப்படும் மாணவர்களை பஸ்ஸில் அழைத்து வரும் பணியை, அந்த பாடசாலையின் அதிபரே மேற்கொள்கிறார்.

மெதிரிகிரிய சிறிமாவோ பண்டாரநாயக்க ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ஜே.கே.சமிந்த பிரியஷாந்த என்பவரே பாடசாலையின் அதிபராகவும், பஸ் சாரதியாகவும் செயற்படுகிறார்.

எரிபொருள் நெருக்கடியினால் பல பாடசாலைகள் மூடப்பட்டு நிலையிலும், தனது பாடசாலையை மூடாத அதிபர் போக்குவரத்து சிரமம் உள்ள சிறு வர்களை பாடசாலை பஸ்ஸில் ஏற்றி பாடசாலை முடிந்ததும் பாடசாலை பஸ்ஸில் வீடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

காலை 6.30 மணியளவில் சைக்கிளில் பாடசாலைக்கு வரும் அதிபர், அயல் பிரதேசங்களில் இருந்து பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கிறார்.

சுமார் மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக இந்தப் பணியை மேற்கொள்வதாகவும், பெற்றோர்கள் இயன்றவரை பாடசாலைக்குத் தேவையான எரிபொருளை தந்து உதவுவதாகவும் அதிபர் தெரிவித்தார்.

காலை 8.00 மணிக்குள் 3 முறை பஸ் இயக்கப்படுகிறது.

மதியம் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைந்ததும், 2.30 மணிக்குள் அனைத்து மாணவர்களையும் பத்திரமாக வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து வருவதில் உள்ள சிரமங்கள் குறித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அதிபரிடம் தெரிவித்ததையடுத்து அதிபர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். (அ)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களமும் அமைச்சர் தம்மிக்க பெரேராவின் கீழ்!

கொழும்பு, ஜூன். 29

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேராவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஏனைய ஐந்து நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜூன் 27 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான திட்டம், கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட், டெக்னோ பார்க் டெவலப்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைச்சர் தம்மிக்க பெரேராவின் கீழ் வரும்.

இதேவேளை, இலங்கை அரசியலமைப்பின் 44(1)(ஆ) சரத்தின் கீழ், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக குளப்பு ஆராச்சிகே டொன் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி வெளியிட்டார்.

ஈழநாடு
Eelanadu

# கடற்படையின் வாகனம் டிப்பருடன் மோதி விபத்து

*திருமலை, ஜூன் 29*

*திருகோணமலை ஹபரன பிரதான வீதியின் கித்துல் ஊற்று என்னுமிடத்தில், கடற்படையினர் சென்ற கெப் வாகானம் டிப்பருடன் மோதியதில் மூன்று கடற்படையினர் படுகாயமடைந்தனர்.*

*இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*கற்படை கெப் வாகானம் முன்னால் சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*







## மரண அறிவித்தல்

பிறப்பு
30 - 08 - 1950



இறப்பு
26 - 06 - 2022

### கோவிந்தன் சோமசுந்தரம்

யாழ். நாவற்குழி தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வதிவிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தன் சோமசுந்தரம் கடந்த 26-06-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கோவிந்தன், நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும்,பொன்னம்பலம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற கந்தசாமி, பூமணி(அண்ணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற அனித்தா, கஜன்(சுவிஸ்), மதிதாஸ் (பிரான்ஸ்), துருஷியா(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும்,கஜன் தீபா(சுவிஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், செல்வம் ரூபா(சுவிஸ்), தம்பிராசா வவா(லண்டன்), சிறீதரன் தயா(கொழும்பு), குணம் விஜி(சுவிஸ்), குகன் வசந்தி(வவுனியா), ஜெகன் ரம்மியா(கனடா) ஆகியோரின் மாமாவும், பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Raymond House, 115 D. S. Senanayake Mawatha, Colombo எனும் முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு இன்று (29-06-2022) புதன் கிழமை பி.ப 02:00 முதல் பி.ப 04:00 மணிவரை இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கஜன்(மகன்),**
**தீபா(மருமகள்)**

தொடர்புகளுக்கு
**கஜன் - மகன்**
**Mobile : +41779840826**
**செல்வம் - மருமகன்**
**Mobile : +41763445204**
**குணம் விஜி - மருமகன்**
**Mobile : +41435573330**
**சிறீதரன் - மருமகன்**
**Mobile : +94777219369**
**மதி - மகன்**
**Mobile : +33605720419**
**ரம்மியா - மருமகள்**
**Mobile : +14165564033**
**வவா - மருமகள்**
**Mobile : +447587180442**

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 08 - 1932



மறைவு
26 - 06 - 2022

### திருமதி கமலாம்பிகை குமாரசாமி

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட கமலாம்பிகை குமாரசாமி அவர்கள் 27.06.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருணாசலம் தெய்வானைபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற குமாரசாமி (புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,சுஜிதா, சுகுமார், சுபகுமார், சுஜித்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், பாலசிங்கம், சண்முகலிங்கம், ராஜேஸ்வரி, தர்மாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,மகாதேவன், கலைவாணி, சீதா, புவனலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,நர்மதா- ஆருரன், ஹம்சா- கஜசனன், யதுசிகா-சிவாகரன், துர்க்கா, கோகுலன், மகிஷா, துளசிகா, நிலக்ஷி, கிரிஷிந்தன், அனுக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,வர்சன், யாதவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 29 Jun 2022 5:00 PM - 9:00 PM
Thursday, 30 Jun 2022 9:30 AM - 11:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 30 Jun 2022 12:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue> Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுகுமார் - மகன்**

தொடர்புகளுக்கு:
**சுஜிதா - மகள்** Mobile : +94766260494
**சுகுமார் - மகன்** Mobile : +16475021485
Phone : +19052011485
**சுபகுமார் - மகன்** Mobile : +14165612782
**சுஜித்குமார் - மகன்** Mobile : +14373299461

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 06 - 1945



மறைவு
24 - 06 - 2022

### மருதப்பு செல்வராசா (செல்வானந்தம்)

யாழ். புங்குடுதீவு 4ம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 3ம் வட்டாரம் வீரம்புளியடியை வசிப்பிடமாகவும், தற்போது ஜேர்மனி Bremervörde ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு செல்வராசா அவர்கள் 24.06.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மருதப்பு நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை (நெடுந்தீவு) வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,அன்னம்மா அவர்களின் ஆருயிர்க் கணவரும், முரசொலிமாறன்(மாறன்-ஜேர் மனி), பாமா (கண்ணா - சுவிஸ்), நளாயினி(கருணா-லண்டன்), மாலினி (மாலா-கனடா), சிறிமாறன்(சிறி-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கோகுலராணி(ஜேர்மனி), யசோதரன்(சுவிஸ்), சிவகுருநாதர்(லண்டன்), காலஞ்சென்ற மதியழகன் மற்றும் இரஜிநிதி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான ஞானம்மா, தங்கரத்தினம், யோகம்மா, மகேஸ்வரி மற்றும் நாகரத்தினம் (மணியம் - இலங்கை), நடராசா (கந்தசாமி- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், முருகேசு, தம்பாபிள்ளை, செல்வராசா மற்றும் சிவகாமிப்பிள்ளை(அம்மாச்சி- இலங்கை), காலஞ்சென்ற சித்திரா மற்றும் நாகம்மா(இலங்கை), காலஞ்சென்ற விசுவலிங்கம் (விசுவப்பா) மற்றும் மகேஸ்வரி(இலங்கை) ஆகியோரின் மைத்துனரும்,காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கமலாம்பாள், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகலனும்,அபிநயா, நிதர்சனா, ஆர்த்திகன், பிரசன்னா, அபூர்வன், விஸ்னுகா, கஜானுகன், ஆயிசா, ஆரங்கன், திசானன், நிதுசன் ஆகியோரின் பாசமிகு அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 30 Jun 2022 11:00 AM - 1:00 PM
Bestattungshaus Weihs Neue Str. 85, 27432 Bremervörde, Germany

கிரியை
Thursday, 30 Jun 2022 1:00 PM - 3:30 PM
Bestattungshaus Weihs Neue Str. 85, 27432 Bremervörde, Germany

தகனம்
Thursday, 30 Jun 2022 3:30 PM - 4:00 PM
Bestattungshaus Weihs Neue Str. 85, 27432 Bremervörde, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.அன்னாரின் பூதவுடலை பார்வையிட வருபவர்களும் இறுதிக்கிரியைக்கு வருபவர்களும் Covid-19 தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் அல்லது அன்ரிஜன் பரிசோதனை செய்திருத்தல் வேண்டும்.

தகவல்:
**சிறி - மகன்.**

தொடர்புகளுக்கு
**அன்னம்மா - மனைவி** Mobile : +494761749931
**மாறன் - மகன்** Mobile : +4915141686378
**கண்ணா - மகள்** Mobile : +41788909510
**கருணா - மகள்** Mobile : +447508164890
**மாலா - மகள்** Mobile : +14162847911
**சிறி - மகன்** Mobile : +14167047984

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*